விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2035 | மார்கழி 08 | வியாழக்கிழமை (23.12.2004) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 04

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

## சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு

# கட்சிகளிடையே இணக்கத்தை ஏற்படுத்த

# மகாநாயக்க தேரர்கள் அதிதீவிர முயற்சி!

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்துவதற்கு அரசுடனும் எதிர்க்கட்சியுடனும் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு பௌத்த பீடாதிபதிகள் முயற்சி செய்துவருவதாக மல்வத்தைபீட மகாநாயக்கர் திப்புட்டுவாவே சிறீ சுமங்கலதேரர் தெரிவித்துள்ளார்.**

மூன்று நிக்காயாக்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்களும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவையும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் விரைவில் சந்தித்து இது தொடர்பாக பேசவுள்ளதாக அவர் கூறினார். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டிய அவசியம் இன்று எழுந்துள்ளது. இரு தரப்பினரும் உடன்பாட்டுக்கு வந்தால் அவ் உடன்பாட்டில் எட்டப்பட்ட தீர்வு குறித்த தகவலை விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி அது தொடர்பான பதிலை அவர்களிடமிருந்து பெறமுடியும். அரசியல் சுயலாபத்துக்காக ஒவ்வொரு கட்சியும் உடன்பாடு இல்லாத போக்கில் பிரிந்து தொடர்ந்தும் பயணித்துக் கொண்டிருக்கின்றன. அரசாங்கத்தால் மட்டும் இனப் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுவிட முடியாது. அதற்கு எதிர்க்கட்சிகளின் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பும் வேண்டும். எனவே அரசும் எதிர்க்கட்சிகளும் சிந்தித்துச் செயற்பட்டு வாய்ப்புக்களை உறுதி செய்துகொண்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என தேரர் தெரிவித்துள்ளார். (ச)

# சமாதானத்தை வலியுறுத்தி நேற்று கைதடியில் மனித சங்கிலிப் போர்

## நாளை கொடிகாமத்தில் நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

போருக்கான ஆயத்தங்களில் அரசு ஈடுபடுவதைக் கண்டித்தும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்பதை வலிறுத்தியும் நேற்று இரண்டாவது மனித சங்கிலிப் போராட்டம் கைதடியில் நடைபெற்றது.

தென்மராட்சியின் பல பகுதிகளிலிருந்தும் வருகை தந்த ஆயிரக்கணக்கான மக்கள், கைதடிச் சந்தியிலிருந்து வீதியின் இருபக்கமும் கைகளை கோர்த்தவாறு காலை 10.15 மணியிலிருந்து சுமார் ஒரு மணிநேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டோர் விடுதலைப் புலிகளின் தலைவரின் உருவப்படங்களைத் தாங்கியவாறும் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளையும் வைத்திருந்தனர்.

தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டு வரும் மனித சங்கிலிப் போராட்டத்தின் மூன்றாவது போராட்டம்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## மட்டக்களப்பில் நேற்று இளைஞன் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று பிற்பகல் 1.15 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அரசடிச் சந்தியிலுள்ள ஆஞ்சநேயர் மரக்காலைக்கு முன்பாக இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.


மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்கள் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தின் போது கொல்லப்பட்டவருடன் வந்த மற்றுமொரு இளைஞர் தப்பியோடியுள்ளார்.

கொல்லப்பட்டவர் அடையாளம் காணப்படவில்லை. துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்களையும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட இளைஞனின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-08)

## இடம்பெயர்ந்த மக்கள் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு



(கிளிநொச்சி)

யாழ். மாவட்டத்தில இடம்பெயர்ந்தோருக்கான நலன் புரிச்சங்கப் பிரதிநிதிகள், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பு நேற்று கிளிநொச்சியில் உள்ள புலி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இருவர் நேற்று சுட்டுக் கொலை

(கொழும்பு)

கொழும்பு நவகமுகறாகமப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

சுட்டுக் கொல்லப்பட்ட இருவரையும் கைது செய்வதற்காக பின்தொடர்ந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா லண்டன் பயணம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டனிற்கு பயணமானார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்று பிற்பகல் ஜனாதிபதி லண்டன் சென்றார்.

தனது பயணத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பும்வரை பாதுகாப்பு அமைச்சராக ரட்னசிறி விக்கிரமநாயக்கவும் பதில் கல்வி அமைச்சராக தினேஸ் குணவர்த்தனவும் கடமையாற்றுவார்கள் என் சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது. (ச-08)

## தமிழ் இளைஞர்கள் மூவர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தை அண்மித்த பகுதியில் ஆட்டோவில் பயணம் செய்த மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு கைதுசெய்யப்பட்ட இவர்கள் முகத்துவாரம் பொலிஸா

(12 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே...**

**யாழ்ப்பாணத்தில் பயிற்சிபெற்று நிர்வாக சேவைக்கு நியமனம் பெற்றுள்ள 564 பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் 2 ஆம் பக்கத்தில்...**

## விசேட அதிரடிப்படைக்கு ஆட்சேர்க்க நடவடிக்கை

(கொழும்பு)

விசேட அதிரடிப்படைக்கு ஆட்சேர்க்கும் பணி அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் ஆயிரத்து 52 பேரை அதிரடிப்படைக்கு உள்வாங்குவதற்கான திட்டத்துக்கு பொலிஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜயந்த தனபால அம்பாறை விஜயம்

(அம்பாறை)

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நேற்று அம்பாறைக்கு விஜயம் செய்துள்ளார்.

போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டுவரும் இடங்களிற்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்வதே இவ் விஜயத்தின் நோக்கமென தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஜயந்த தனபாலவுக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் பயிற்சிபெற்ற பட்டதாரிகளில் 564 பேர் நிர்வாக சேவைக்கு நியமனம்

## பெயர் விபரங்கள் நேற்று வெளியாகின

**அரச திணைக்களங்களில் வேலையற்ற பட்டதாரிகளை சேர்த்துக்கொள்ளும் பொருட்டு யாழ். மாவட்டத்தில் பயிற்சியளிக் கப்பட்டவர்களில் 564 பேர் அரசதுறை யின் பொது நிர்வாக சேவைக்கு நியமிக் கப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விப ரங்கள் நேற்று வெளியாகியுள்ளன.**

**இதேவேளை ஆசிரிய நியமனம் வழங் கப்படவுள்ள பட்டதாரிகளின் பெயர் விப ரங்கள் மிகவிரைவில் வெளியாகவுள்ள தாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

எஸ்.சிறிசிவசக்தி (அத்தியடி), ரீ.சிறிசெல்வம் (சரவணை கிழக்கு), பி.கணேஷ்குமார் ( சரவணை மேற்கு), எஸ்.ஆதி ரத்தினம் (வேலணை கிழக்கு), சிவராஜா (மண்டைதீவு), எஸ்.தர்சினி (நயினாதீவு), வி.முரளிதாஸ் (வேலணை மேற்கு), வை.கேதீஸ்வரி (பலாலி வீதி), எம்.பத்மராஜா (ஆனைக்கோட்டை), என்.ஜசிந்தா (சுண்டுக்குளி), ஜே. ஜெனாஜ் டியோனி ( நல்லூர்), ஜே.ஜஸ்ரின் (நல்லூர்), கு.ஆனந்தரூபி (ஓட்டுமடம்), பி.ரூபினா றெனோலா (பாஷை யூர்), சி.துஸ்யந்தி (யாழ்ப்பாணம்), டி.ஸ்ரெமினாஜீவானி (கொய்யாத்தோட்டம்), ஜீ.கிருஷ்ணமலர் (யாழ்ப்பாணம்), வசந்தநாயகம் (யாழ்ப்பாணம்),

ஆர்.ராமகிருஷ்ணா (தெல்லிப்பளை), என்.யசோதரா (யாழ்ப்பாணம்), எஸ்.றொமேஷ் (சுண்டுக்குளி), ஏ.ஜேசு தாஸ் (நாவாந்துறை), எஸ்.வினோபாகரன் (யாழ்ப்பாணம்), ஆர்.றிலியாரெவெல்ஷியா (யாழ்ப்பாணம்), ஏ.அலையரசி (யாழ்ப்பாணம்), ஏ.அனிஸ்ரா ஜெயக்குமாரி (யாழ்ப்பாணம்), என்.பிரபாகரன் (நாவாந்துறை), எம்.சிவரூபி (யாழ்ப்பாணம்), ஆர்.ராஜகுமார் (வண்ணார்பண்ணை), ஜே.அமொரின் (பாஷையூர்), எம்.துஷ்யந்தி (சுண்டுக்குளி), எஸ்.மேரி இமெல்டா (யாழ்ப்பாணம்), ஆர்.ஜெயராம் (யாழ்ப்பாணம்), ஏ.ஜெனட்மேரி அமலினி (யாழ்ப்பாணம்), ரீ.கோபிநாத் (ஊர் காவற்துறை), ரீ.கவிதா (யாழ்ப்பாணம்), எஸ்.தயாபரி (யாழ்ப் பாணம்,

ரீ.அரவிந்தன் (யாழ்ப்பாணம்), என்.கலைச்செல்வி (யாழ்ப் பாணம்), எம்.மேகலா (யாழ்ப்பாணம்), ரீ.தவப்பிரியா (அத்தி யடி), மோகனலக்ஷ்மி (சுண்டுக்குளி), எஸ்.ஸ்ரீபன் (யாழ்ப் பாணம்), எஸ்.ஜனரதனம் (யாழ்ப்பாணம்), என்.சியாமளா (கோண்டாவில்), எஸ்.சிவனேசன் (ஆனைப்பந்தி), எஸ். சக்திநாதன் (இணுவில்), ரீ.காண்டீபன் (அரியாலை), எஸ். ஹரிதாஸ் (அரியாலை), எஸ்.ஜெகதீஸ்வரன் (கோண்டா வில்), வி.சுபாஷினி (திருநெல்வேலி), ஆர்.ரமேஷ் (திருநெல் வேலி), பி.விஜி (அரியாலை), எஸ்.கார்த்திஜாயினி (நல்லூர்), டபிள்யூ.ஜெயமலர் (அரியாலை), வி.பிரபாலினி (வண்ணார் பண்ணை),

எஸ்.சாந்தினி (வண்ணார்பண்னை), ஜே.கேதீஸ்வரசர்மா (கல்வியங்காடு), எம்.தர்சினி (பிறவுண்றோட்), எஸ்.ராஜ சேகரம் (கலட்டி), எஸ்.கலைராணி (நல்லூர்), எஸ்.சங்கர தாஸ் (இணுவில்), எஸ்.ஜானகி (அரியாலை), என்.ரஜனி (கொக்குவில்), ஜே.கலாவதி (நல்லூர்), எஸ்.சுதர்சன் (கொக்குவில்), ஜே.பவித்ரா (யாழ்ப்பாணம்), எஸ்.ரோகினி (கஸ்தூரியார்வீதி), கே.தயாளினி (கந்தர்மடம்), பி.ராதிகா (நல்லூர்), ஆர்.கிருஷ்ணானந்தன் (கொக்குவில்), எஸ். சுதா (நல்லூர்), எஸ்.சுலோஜினி (நல்லூர்), சீ.சசிகலா (கோண்டாவில்), சி.தர்சினி (நல்லூர்),

கே.சிவாஜினி (திருநெல்வேலி), பி.சுபாஜினி (வேலணை), ஆர்.சைலஜா (நல்லூர்), கே.கலையழகன் (வண்ணார் பண்ணை), ஆர்.விஜயகுமார் (நாயன்மார்கட்டு), கே.உத யவேல்வரி (நாயன்மார்கட்டு), எஸ்.மணிகரன் (கொக்குவில்), எம்.சுகந்தன் (திருநெல்வேலி), பி.அங்கயற்செல்வி (ஓட்டு மடம்), ஜே.ராதா (திருநெல்வேலி), எஸ்.கல்யாணி (நீராவி யடி), எம்.இந்துமதி (கோண்டாவில்), என்.அசோக்குமார் (திருநெல்வேலி), வீ.தயாளினி (யாழ்ப்பாணம்), எஸ்.குழலி (கொக்குவில்), எஸ்.விமலன் (அரியாலை), யு.ஞானசுக்ரி (நல்லூர்), என்.கனிஸ்டர் உமாகாந் (நல்லூர்), எஸ்.சுபா ஜினி (கந்தர்மடம்),

எஸ்.சுஜிதா (சுண்டுக்குளி), எஸ்.தேவிகா (நாரந்தனை), வீ.சிவகுமார் (முடமாவடி), எஸ்.சுகஜா (கொக்குவில்), எஸ். பக்தகௌரி (கந்தர்மடம்), கே.பாமினி (கந்தர்மடம்), எஸ். ஜனனி (கொக்குவில்), எஸ்.சிவானி (கொக்குவில்), ஜே.வாசுகி (இளவாலை), எம்.பிரசாந்தி (திருநெல்வேலி), ஏ.சண்முகதாஸ் (கந்தர்மடம்), ரி.சத்யலோஜினி (ஆனைக் கோட்டை), எஸ்.மாதனி (நல்லூர்), கே.பைரவி (சுண்டுக் குளி), எம்.சரஸ்வதி (கந்தர்மடம்), எம்.அபிராமி (கொக்கு வில்), ஜே.சுபாஜினி (சிவப்பிரகாசம் வீதி), எல்.ராம்ரமணன் (அரியாலை), எஸ்.செல்வதாஸ் (நல்லூர்),

எல்.மீரா (நல்லூர்), கே.கோடீஸ்வரன் (அரியாலை), ரீ.ராதாஜெயலக்ஷ்மி (யாழ்ப்பாணம்), சீ.மாதவி (வண்ணார் பண்ணை), எஸ்.சிறிஸ்கந்தராஜா (அரசடி), சீ.துஷ்யந்தி (நல்லூர்), ஜீ.நாமகள் (சுண்டுக்குளி), கே.செந்தில்நாதன் (கோண்டாவில்), எஸ்.சிவபாலன் (யாழ்ப்பாணம்), ரீ.செந் தூரன் (தலையாழி),

எம்.ரஜனி (சரசாலை), என்.அருட்செல்வி (சாவகச் சேரி), எஸ்.சசிகலா (வரணி), எஸ்.ஜெயானந்தன் (வரணி), எஸ்.செந்தூரன் (மீசாலை), ஏ.சிவரஞ்சினி (மீசாலை), பி. பாலகுமார் (சாவகச்சேரி), ஜீ.வளர்மதி (இயற்றாலை), பி.அஜிதா (மட்டுவில்),

வி.உதயகுமாரி (கொடிகாமம்), திருச்செந்தூர்ச்செல்வன் (மட்டுவில்), எஸ்.கருணாகரன் (சாவகச்சேரி), ரீ.ஜீவநந்தினி (மிருசுவில்), கே.மயூரன் (சரசாலை), கே.கோமதி (சாவகச் சேரி), எஸ்.விஜயபாரதி (மட்டுவில்), பி.சுகந்தி (சாவகச் சேரி), பி.சனாதனன் (கல்வயல்), வி.விஜேந்திரன் (சாவகச் சேரி), கே.சிவகுமார் (அல்லாரை), பி.குஷாந்தினி (நுணா வில்), ஏ.வாசுகி (வரணி), கே.ஜெயசுதா (சரசாலை), எஸ். உஷாநந்தி (இயற்றாலை), என்.குகனேஸ்வரி (மீசாலை), எஸ்.கோகுலவதனி (மிருசுவில்), எஸ்.சிவானுஜா (கல்வயல்), எஸ்.வதனா (சரசால்லை),

எஸ்.கருணாகரன் (வரணி), என்.சுதந்திரன் (சாவகச் சேரி), வி.நந்தகோபன் (மீசாலை), ஏ.ஜெகனேஸ்வரி (மட்டு வில்), கே.தவநேசன் (கல்வயல்), வி.எழினி (கைதடி), ஆர். நாகநாதன் (மட்டுவில்), பி.அகல்யா (மட்டுவில்), டீ.பிரண வனன் (கைதடி), ரீ.ஜெயராசா (மீசாலை), எம்.கமலாம்பிகை (உசன்), எம்.தயாகுமரன் (சங்கத்தானை), என்.லட்சு மணன் (தவசிக்குளம்), எஸ்.சுசிகுமாரன் (விடத்தல்பளை), என்.பாபுஜி (சங்கத்தானை), என்.துளசினி (சங்கத்தானை), ரி.பரிமளா (சாவகச்சேரி), கே.வாசுகி (மீசாலை), வி.தயா சீலன் (சரசாலை),

எஸ்.மதீஸ்வரன் (கச்சாய்), எம்.சுமதி (சங்கத்தானை), கே.குணரத்தினராசா (கைதடி), என்.மிதிலா (கைதடி), கே. நிலாந்தி (மீசாலை), ஆர்.சுபாஜினி (கல்வயல்), பி.கோகுல குமாரி (மட்டுவில்), என்.பிரபாகரன் (சாவகச்சேரி), கே.சுபா ஜினி (கொடிகாமம்), என்.ராஜன் (சங்கத்தானை), எஸ்.மயூ ரன் (இடைக்குறிச்சி), எஸ்.யசோதரன் (அல்லாரை),

என். சோதிரூபன் (புலோலி), கே.கனிமொழி (தம்பசிட்டி), ஆர்.சிவனேசன் (வல்வெட்டித்துறை), ரீ.சண்முகதாஸ் (ஆதி கோவிலடி), பி.அனுஷா (புலோலி), ஆர்.மைதிலி (பருத்தித் துறை), பி.மகாதேவி (புலோலி),

ஆர்.நவமணி (புலோலி), கே.லலிதா (தும்பளை), வி.பவ தரணன் (தொண்டமனாறு), ரீ.யுரிசன்ஜென்ராஜ் (அல்வாய்), எம்.தவலிங்கம் (புலோலி), கே.சுகிர்தநந்தன் (தொண்ட மனாறு), எஸ்.ஜோசப் ஜேசுராஜா (அல்வாய்), எம்.கனக ராஜா (வியாபாரிமூலை), கே.நாகநாதன் (புலோலி), என். கேதீஸ்வரா (நெல்லியடி), எஸ்.சதரூபினி (வல்வெட்டித் துறை), எஸ்.வசந்தன் (புலோலி), பி.பிரேமச்சந்திரன் (பருத் தித்துறை), எஸ்.சிவகுமார் (புலோலி), கே.மகாவலிராஜன் (அல்வாய்), ஆர்.பார்த்திபன் (புலோலி), இ.தர்சினி (அல் வாய்), எஸ்.பகீரதன் (புலோலி), ரீ.ராமேஸ்வரன் (வல்வெட் டித்துறை),

யு.சிவச்செல்வி (பொலிகண்டி), கே.சுதாகரன் (அல்வாய்), ரீ.விஜிதா (அல்வாய்), இ.சேந்தன் (கரவெட்டி), பி.தனுஷா (உடுப்பிட்டி), எஸ்.கோமதி (இமையாணன்), என்.செந்தில் மணாளன் (அல்வாய்), பி.மதிவதனி (கரவெட்டி), வி.பகவதி (கரணவாய்), பி.சந்திராதேவி (கரணவாய்), கே.பாலேந் திரன் (கரணவாய்), கே.ராகினி (கொற்றாவத்தை), எம்.வாசுகி (கரவெட்டி), பி.குணவதனி (துன்னாலை), எஸ். குமரமனோகரி (வதிரி), கே.வனஜா (உடுப்பிட்டி), கே.அம் பிகைபாகன் (கரணவாய்), எம்.செல்வரத்தினம் (இமையா ணன்), என்.செந்தினி (துன்னாலை),

எஸ்.சிவச்செல்வன் (அல்வாய்), கே.மோகனராஜா (துன் னாலை), எஸ்.நவநீதன் (இமையாணன்), வி.ஆனந்தராணி (வதிரி), எஸ்.காந்தரூபி (கரவெட்டி), எஸ்.சிவரஞ்சன் (கர வெட்டி), ஆர்.சண்முகதாஸ் (துன்னாலை), எஸ்.விவேகா னந்தம் (துன்னாலை), பி.வாசீகன் (நெல்லியடி), கே.ஹேம லதா (இமையாணன்), ஆர்.மாலினி (அல்வாய்), எஸ்.பிரேமிலா (கரவெட்டி), ஜீ.ஜெயகாந்தன் (அல்வாய்), எஸ்.தனுஷா (நெல்லியடி), ஆர்.ராஜன் (அல்வாய்), ரீ.சசிகரன் (வல்வெட் டித்துறை), கே.வசந்தன் (வல்வெட்டித்துறை), கே.ஜெய சீலன் (கரவெட்டி), குணாதயாளன் (இமையாணன்)

ஏ.சுதா (கரணவாய்), ஆர்.சற்குணதேவி (நெல்லியடி), ஆர்.பிரகலாதன் (வல்வெட்டித்துறை), வி.வாகேசன் (உடுப் பிட்டி), எஸ்.சிவசங்கர் (துன்னாலை), பி.உமா (உடுப்பிட்டி), பி.சுகந்தன் (கரணவாய்), எஸ்.நேசலிங்கம் (இமையாணன்), வி.திவ்யாநந்தன் (அல்வாய்), என்.நந்தகுமார் ( கரணவாய்), எஸ்.சுபச்செல்வன் (அல்வாய்), என்.சாலினி (அல்வாய்), கே.கேசவமூர்த்தி (கொற்றாவத்தை), கே.தயா (கரவெட்டி), ஆர்.ரஞ்சிதன் (அல்வாய்), கே.ஜெயதாஸ் (அல்வாய்), கே. சிறிகந்தராசா (இமையாணன்), ஜே.ஜெயசுதன் (நெல்லியடி), வி.மணிமாறன் (வதிரி), ரீ.சுகந்தி (அல்வாய்), பி.ரேவதி (கரவெட்டி), எஸ்.செல்வராஜ் (உடுப்பிட்டி),

எஸ்.செல்வகஜநந்தினி (கோப்பாய்), பி.கலாரூபி (நீர் வேலி), வி.சிவலட்சுமி (அச்சுவேலி), எம்.நவகாந்தா (உரும் பிராய்), பி.வாகீசன் (கோப்பாய்), ரீ.பாலகிருஷ்ணன் (கோண் டாவில்), எம்.கொலஸ்ரீனா (கோப்பாய்), எஸ்.யமுனாராணி (அச்சுவேலி), ஆர்.விக்னராஜ் (உரும்பிராய்), எஸ்.சிறிரங்கன் (உரும்பிராய்), வி.நாகேஸ்வரபாலா (புத்தூர்), எஸ்.கசிகலா (கல்வியங்காடு), எஸ்.மீராதேவி (அச்சுவேலி), எஸ்.தயா நிதி (கோப்பாய்), எஸ்.ஜெகன் (நீர்வேலி), ஆர்.வானதி (இடைக்காடு),

கே.கிரிதரன் (யாழ்ப்பாணம்), பி.மாலினி (கோப்பாய்), ரீ.ஞானசசி (நீர்வேலி), என்.கல்யாணி (நீர்வேலி), ரீ.சுதர்சினி (நீர்வேலி), ரீ.ரஜிதா (கோப்பாய்), என்.ராஜரட்ணம் (அச்சு வேலி), எம்.அகிலா (உரும்பிராய்), வை.அருந்ததி (நீர்வேலி), ஆர்.துஸ்யந்தன் (அச்சுவேலி), ஐ.நளாயினி (புத்தூர்), ரீ.கரி கரன் (யாழ்ப்பாணம், ரீ.கவிதா (கோப்பாய்), பி.சுகிர்தா (அச்சு வேலி), வி.கயல்விழி (சுன்னாகம்), கே.தவநிதி (அச்சுவேலி), என்.குகதாசன் (அச்சுவேலி), எஸ்.கீதாஞ்சலி (நீர்வேலி), கே.ஐங்கரன் (யாழ்ப்பாணம்),

ஆர். குகராஜா (நீர்வேலி), ஜீ. ஞானச்சந்திரன் (புத்தூர்), வி. பிரேம்குமார் (அச்சுவேலி), வி. கஸ்தூரிகுமா (நீர்வேலி), ஆர். குகனேஸ்வரி (அச்சுவேலி), என். அம் பிகை (யாழ்ப்பாணம்), கே. நகுலன் (அச்சுவேலி), எம். திருச்செல்வம் (கோப்பாய்), ஆர். பிரதீபா (யாழ்ப்பாணம்), எம். கண்ணகி (யாழ்ப்பாணம்), ஆர். கலைவாணி (நீர்வேலி), ரீ. இலட்சுமணன் (யாழ்ப்பாணம்), எஸ்.பூரணி (யாழ்ப்பாணம்), பி. சந்தியன் (யாழ்ப்பாணம்), எஸ்.பிரசாந் தன் (கோப்பாய்), ரீ. சண்முகம் (நீர்வேலி), எஸ்.முத்த மிழ்செல்வி (உரும்பிராய்), என். கஜானி (யாழ்ப்பாணம்), என். வனஜா (நீர்வேலி),

என். ரமரூபன் (நீர்வேலி), ரீ. தேவபாக்கியராஜா (அச்சு வேலி), எஸ். முகுந்தன் (கோப்பாய்), எஸ். அமுதா (அச்சு வேலி), ஏ. கௌசலா (புத்தூர்), எஸ். நடேசன் (மல்லாகம்), எஸ். தேவனேஸ்வரி (தெல்லிப்பளை), பி. சர்மிளா (அளவெட்டி), ஜெ. கலையரசி (அளவெட்டி), எஸ். ஜெயகலா (தெல்லிப்பளை), பி. வசந்தி (வசாவிளான்), வி. ரவிச்சந்திரன் (தெல்லிப்பளை), என். புஸ்பலதா (வசா விளான்), எஸ்.ராகினி (மாவிட்டபுரம்), கே. சுபாகரன் (தெல்லிப்பளை), கே. தர்மபாலன் (தெல்லிப்பளை,), வி. கல்யாணி (காங்கேசன்துறை), ஆர். சுதாஜினி (மல்லாகம்), ரீ. ஜீவகுமார் (மல்லாகம்),

எம். சிவகுமார் (காங்கேசன்துறை), கே. மாசிதன் (மாவிட்டபுரம்), ஜீ. அனுசா (வசாவிளான்), ரீ. சுரேந்தி (தெல்லிப்பளை), எஸ். செந்தூர்வாசன் (தெல்லிப்பளை), கே. தர்சினி (தெல்லிப்பளை), எஸ். ரங்கதரன் (தெல்லிப் பளை), வி. ஜெயசுதா (தெல்லிப்பளை), எம். சிவகலாராணி (காங்கேசன்துறை), ரீ. வசீகரன் (வசாவிளான்), எஸ். போதினி (தெல்லிப்பளை), யு. சிவயோகினி (அளவெட்டி), எஸ். லோகேஸ்வரன் (அளவெட்டி), கே. சத்தியப்பிரியா (மல்லாகம்), எஸ். நிமலன் (தெல்லிப்பளை), எம். சுரேஸ் குமார் (தெல்லிபளை), எம். லதாங்கி (தெல்லிப்பளை), எஸ். சுரேந்திரன் (தெல்லிப்பளை), எஸ். ஜெயலக்குமி (வசாவிளான்),

எஸ். ரங்கினி (மல்லாகம்), ஆர். அனுசியா (அளவெட்டி), எஸ். சுகுனா (மல்லாகம்), என். பாலமுரளி (தெல்லிப் பளை), எஸ்.ரமணி (தெல்லிபளை), ரீ.திருச்செல்வி (மல் லாகம்), ஆர். சுகாஜனனன் (அளவெட்டி), எம். கலாஜினி (மல்லாகம்), எல். விஜிதா (அளவெட்டி), கே. சசிகரன் (மாவிட்டபுரம்), என். முகுந்தன் (தெல்லிப்பளை), எம். பாமினி (தெல்லிப்பளை), எஸ்.சுதர்சினி (கருகம்பனை), எஸ்.நமிநாதன் (தெல்லிப்பளை), வி.சிவகௌரி (இள வாலை), ஏ. ரெஜினோல்ட்ராஜ் (தெல்லிப்பளை), எஸ். கிரியா (காங்கேசன்துறை), என்.சிறிசங்கர் (அளவெட்டி), என்.ஜெகன் (காங்கேசன்துறை,

எஸ். நந்தினி (தெல்லிப்பளை), கே.ஞானச்சந்திரன் (தையிட்டி), கே. செல்வலக்குமி (மல்லாகம்), பி. கஜேந் திரன் (காங்கேசன்துறை), எம். கௌதமி (அளவெட்டி), பி. வனிதா (சுன்னாகம்), கே. சுமலினி (உடுவில்), வை. தர்ஷா (சுன்னாகம்), ரீ. அஜீவன் (கந்தரோடை), எம். காண்டீபன் (இணுவில்), எம். சுதா (இணுவில்), வி. மயூரன் (இணுவில்), எஸ். பீஷ்மன் (இணுவில்), ஆர். இராஜ ராஜன் (சுன்னாகம்), என்.வனிதா (உடுவில்), கே. தமி ழரசி (இணுவில்), எஸ் ஞானகுமார் (சுன்னாகம்), ஆர். சிவகுமார் (ஏழாலை), வி.ஈஸ்வரி (தாவடி),

எஸ். சாந்தினி (இணுவில்), எஸ். கலைவாணி (இணு வில்), எம். சிவாநந்தன் (புன்னாலைக்கட்டுவான்), எஸ். சுரேசினி (தாவடி), ஏ.வசந்தராணி (தாவடி), எஸ். தர்சினி (தாவடி), எஸ். சுபாகரன் (உடுவில்), வி. ஷெரின்சஜிமெ லோனி (உடுவில்), எம். தாரணி (இணுவில்), பி. பாலகிரி தரன் (உடுவில்), ரீ. அனிதா (சுன்னாகம்), என். வானதி (உடுவில்), பி. செந்தில்குமார் (தாவடி), ஜே. ஜசினி (உடு வில்), பி. கமலதாசன் (மருதனார்மடம்), ஜீ.நிரந்தினி (உடுவில்), எஸ். சுகிர்ததாஸ் (ஏழாலை), எஸ்.சுகிர்தன் (ஏழாலை), பி. சுகுனா (உடுவில்),

எஸ். கேதீஸ்வரன் (புன்னாலைக்கட்டுவன்), எஸ். அருந்தவச்செல்வி (புன்னாலைக்கட்டுவன்), எஸ். தவக் குமாரி (புன்னாலைக்கட்டுவன்), ஆர். தர்சினி (ஏழாலை), பி. சுமதி (ஏழாலை), சிவாஸ்கந்தசர்மா (ஏழாலை), எஸ். ரஜனி (உடுவில்), ரீ.ஹரிகரன் (ஏழாலை), வி. தர்மசீலன் (உடுவில்), என். யோகேஸ்வரி (இணுவில்), என். ரகுநாத் (உடுவில்), என்.ஜெயசுராஸ் (ஏழாலை), பி.தயாபரன் (தாவடி), எஸ். ஜெயவரதன் (புன்னாலைக்கட்டுவன்), எம். தாரணி (சங்குவேலி), பி. வரதராஜா (சுன்னாகம்), எம். ரவிபாலன் (கந்தரோடை), ஆர்.மைத்துலி (மயிலணி), எஸ். ஞானரூபன் (உடுவில்),

எம். வாசுகி (மயிலிட்டி), என்.சிவசங்கர் (மயிலணி), எம். துஷ்யந்தன் (புன்னாலைக்கட்டுவன்), எம். சத்திய வாணி (சுன்னாகம்), எஸ். சயரூபி (வசாவிளான்), ஏ. சயந்தினி (மல்லாகம்), முரளிதரன் (இணுவில்), ஏ. தஜினி (கந்தரோடை), ரீ. ஜெயக்குமார் (ஏழாலை), எம். குணா நிதி (சுன்னாகம்), எஸ். சிவாஜினி (உடுவில்), என். சிவ ரூபி (சுன்னாகம்), வீ. சுபாசினி (தாவடி), ரீ. மலர்விழி (உடுவில்), என். சூரியராஜா (கந்தரோடை), ரீ. சந்திர காந் (மானிப்பாய்), என். தட்சாயினி (சுன்னாகம்), ஏ. அபரணா (தாவடி), எம். சிவசற்குணம் (தாவடி),

கே. ராதிகா (இணுவில்), எஸ். ருதீரன் (மானிப்பாய்), கே. யசோதா (மாதகல்), எம்.அனுஷா (மானிப்பாய்),எஸ். பிரியதர்சினி (மானிப்பாய்), எஸ்.நீலாஜினி (சண்டிலிப்பாய்), வி.ரமேஸ் (சாவல்கட்டு), கே.கலியுகன் (வடலியடைப்பு), வி.ஜமுனா (சுதுமலை), வி.ஜெயரூபன் (மானிப்பாய்), ரீ. ஜெயக்குமார் (மானிப்பாய்), ஜெ.திலகராணி (மானிப்பாய்), எஸ்.செந்தினி (மானிப்பாய்), எஸ்.சுரேஸ் (இணுவில்),


(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பது ஜே.வி.பியினர் மட்டுமல்ல ஜனாதிபதியும் தான்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைதடியில் உரை

(யாழ்ப்பாணம்)

**சமாதானப் பேச்சுக்களை நகர்த்துவதற்கு முட்டுக்கட்டையாக உள்ளவர்கள் ஜே.வி.பியினரே என்று ஜனாதிபதி சந்திரிகாவால் செய்யப்பட்டு வரும் பொய்ப்பிரசாரங்களைத் தமிழ்மக்களாகிய நாம் முற்றாக நிராகரிக்க வேண்டும். சர்வதேசத்தின் கோபங்களுக்கு இலக்காகாமல் தான் தப்பிக் கொள்வதற்காகவே சந்திரிகா ஜே.வி.பியினரின் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகிறார்.**



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுபபினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்றைய தினம் கைதடியில் இடம்பெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டத்தின் முடிவில் இடம் பெற்ற கண்டனப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் அருந்தவபாலன் தலைமையில் இடம் பெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் நியாயமானது. நீண்ட காலமாகப் பேரினவாதிகளின் அடக்கு முறைகளுக்குள் வாழும் தமிழ்மக்களுக்கு சுதந்திரம் அவசியமானது என்பதைச் சர்வதேச சமூகத்தினர் நன்கு உணர்ந்துள்ளனர்.

இதனால் இலங்கையின் இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுத்தப்படுதல் அவசியம் என்ற தொனியில் அரச தலைமைக்குப் பல்வேறு உலகநாடுகளும் அழுத்தங்களைக் கொடுத்து வரும் வேளையில் ஜனாதிபதி சந்திரிகா தனது அரசியல் எதிர்காலத்தை உறுதிப் படுத்துவதற்காகவும் பௌத்த, சிங்களப் பேரினவாதிகளின் நச்சரிப்புகளில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்குமாக புதியதொரு யுத்தியைக் கையாண்டு வருகிறார்.

அதாவது சமாதானத்தைத் தான் நேசிப்பதாகவும் இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான பேச்சுக்களை நகர்த்துவதில் அதிக அக்கறை கொண்டுள்ளதாகவும் சர்வதேச சமூகத்தினருக்குக் காட்டிக்கொள்வதுடன், தனது இவ்வாறான விருப்புகளுக்கெல்லாம் இடையூறாக ஜே.வி.பியினர் இருந்து வருவதாகப் பொய்ப் பிரசாரங்களில் ஈடுபட்டுவருகின்றார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இக் கபட நாடகத்தினது உள்நோக்கம என்னவெனில் சமாதான விரும்பியாகத தன்னைப் பிரகடனம் செய்து தன் சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பியினர் முட்டுக்கட்டையாக உள்ளனர் என்பதை சர்வதேசத்திற்கு சுட்டிக் கொள்வதுடன், தன்னால் தமிழர்களுக்கு ஒருதீர்வு கிடைத்துவிட்டது என்ற பழியைப் பேரினவாதிகள் சுமத்தாதவாறு தப்பித்துக் கொள்ள முயன்று வருகிறார்.

இதற்கு ஜே.வி.பியினர் மீது குற்றம் சுமத்தி வருகிறார். சர்வதேசத்தின் கண்களில் இருந்து தாம் தப்பிக் கொள்வதற்காக ஜே.வி.பியினரைப் பலிக் கடவாக்கும் சந்திரிகாவின் கபட நாடகங்களைத தமிழ்மக்கள் ஒரு போதும ஏற்றுக் கொள்ளக் கூடாது.

சந்திரிகா எமது பிரச்சினைகளை ஒரு போதும் தீர்த்து வைக்க மாட்டார். ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் ஏற்படக் கூடிய காலம் கனிந்து வந்த வேளையில் அவர் சமாதான முன்னெடுப்புக்களுக்கு எதிராகவே செயற்பட்டு வந்தார்.

இன்று ஜே.வி.பியினர் சமாதான முன்னெடுப்புக்களை குலைப்பதில் எவ்வாறு முனைப்புக்காட்டி வருகின்றனரோ அதேபோல அன்று ஜனாதிபதி சமாதானத்தைக் குழப்புவதில் முனைப்புக் காட்டி வந்தார் என்பதை நாம் அறிவோம்.

தமிழ் மக்களுக்கான தீர்வை குழப்பும் நோக்கத்துடன் ஜே.வி. பியினருடன் இணைந்த சந்திரிகா இன்று ஜே.வி.பியினர் தான் சமாதானத்தின் எதிரிகள். அவர்களே தமிழ்மக்களது தீர்விற்கு முட்டுக் கட்டையாக உள்ளனர் என பிரசாரப்படுத்தி வருவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

உண்மையில் ஜனாதிபதியின் இன்றைய நோக்கம் இனப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில்லை. அவரது நோக்கம் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்துத் தான் மீண்டும் அரசியல் அதிகாரமுள்ள பிரதமராக இருப்பதே. இதற்காகத் தற்போதைய அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி வருகிறார்.

எனவே, அரசின் பொய்ப் பிரசாரங்களைக் கேட்டு ஏமாறாமல் தமிழ் மக்கள் அனைவரும் புலிகள் அணியில் திரண்டு நின்று எமக்கான ஓர் அரசியல் எதிர்காலத்தை உறுதி செய்ய ஒன்றிணைவோம் என்றார். (ப-19,16)

## தேர்தல் வாக்களிப்பின் போது இலத்திரனியல் உபகரணங்களின் பயன்பாடு; அரசியல் கட்சிகள் பலவும் வரவேற்பு

(கொழும்பு)

தேர்தல் வாக்களிப்பில் இலத்திரனியல் உபகரணங்கள் அறிமுகம் செய்யப்படவிருப்பதை அரசியல் கட்சிகள் வரவேற்றுள்ளன.

இதன மூலம் உள்ளூர் தேர்தல் வழிமுறைகள் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்.

இது தொடர்பில் பவ்ரல் அமைப்பின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தப் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வெளிநாட்டுகளின் உதவியினையும், ஆதரவினையும் பெருமளவில் பெற்றுக் கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டார். (ற-4)

# அதிகமான உடற்பயிற்சி ஆபத்தாக முடியுமா ?

**ஆ**டி, ஓடி உணவு தேடும் நிலையில் இருந்த காட்டுவாசிகளின் நிலைமாறித் தற்போது பெரும் பாலானவர்கள் மூளை உழைப்புக் காரணமாக உட்கார்ந்த இடத்திலேயே வேலை செய்யும் **(static)** நிலையில் உள்ளனர். உடலுழைப்பு அற்ற நிலையே பல நோய்களுக்குக் காரணமாகிறது. குறிப்பாக இரத்தக் கொதிப்பு, இதய நோய்கள், நீரழிவு போன்றவை அதிகரிக்க இந்த வகையான வாழ்க்கை முறைகளே முக்கிய காரணம் என்கிறது ஓர் ஆய்வு. எனவே பலர் ஓய்வு நேரங்களில் உடற்பயிற்சி செய்ய நாட்டங் கொண்டனர்.

நகரஙகளெங்கும் உடற்பயிற்சி மையங்கள் உருவாயின. பல புதிய உபகரணங்களுடன் அழகு நிலையங்களாகவும், அவை மாற்றம் பெற்றன. எனவே மக்களுக்கு அதன் மதான மோகம் அதிகாித்து வருவது இயற்கையே. இது தவிர முறையான உடற்பயிற்சியென்பது விளையாட்டு வீரர்களுக்கு மிகவும் அவசியமாகிறது. விளையாட்டு என்பது விளையாட்டிற்கு என்ற நிலை உலகம் முழுவதும் மாறி வருகிறது. வெற்றிக் கனியினைப் பறிப்பதற்காகத் தங்கள் உடலினை எவ்வகையான வருத்தத்திற்கும் உள்ளாக்க விளையாட்டு வர்ர்கள் தயாராக உள்ளனர். ஏனெனில் அப்படி வெற்றி பெற்றவர்களின் புகழ் உலகெங்கும் பரவுகிறது.

அவர்களைப் போல நாமும் புகழ்பெறவேண்டும் எனும் ஆசை இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. எனவே, உடற்பயிற்சி ஆர்வம் உடலை நோயிலிருந்து காத்து கட்டுக்கோப்பாக வைத்திருக்கவும், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறவும் எனப் பல முனைகளில் கிளைவிட்டுள்ளது.



ஆனால், முறையான உடற்பயிற்சி மட்டுமே உடல்நலனுக்கு உகந்தது என்பதனைப் பலர் மறந்து விட்டனர். முறையற்ற உடற்பயிற்சிகள், உடலுக்கு ஒத்துக் கொள்ளாத உடற்பயிற்சிகளை மேற்கொள்ளுதல், கால அளவு நிர்ணயிக்காமல் உடற்பயிற்சி செய்தல், தேவையான சத்துணவுகள் எடுத்துக் கொள்ளாமை போன்றவற்றால் நன்மையைவிடத் தீமையே அதிகம் ஏற்படும்.

எளிய உடற்பயிற்சிகள் எவ்வாறு உடலுக்கு நலம் பயக்கிறதோ அதுபோல கடும் உடற்பயிற்சிகள் உடல் நலனைப் பாதிக்கவே செய்கின்றன என சமீபத்திய ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. குறிப்பாகக் கடுமையான உடற்பயிற்சிகள் விளைவாக நமது உடலின் நோய் எதிர்ப்புத் திறன் **(Immunity)** குறைகிறது எனும் செய்தி நாம் அறிய வேண்டிதாகும்.

1987 ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் உள்ள லோமாலிண்டா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் டேவிட்நீமன் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற ஒரு தொடர் ஓட்டத்தில் கலந்து கொண்ட சுமார் 2300 விளையாட்டு வீரர்களை ஆராய்ந்தபோது அவர்களில் 40 சதவீதம் பேர் தொடர் ஓட்டத்திற்கு தங்களைத் தயார் செய்யும் காலத்தில் ஜல தோசம், ஃப்ளூ போன்றவை உண்டாக்கும் வைரஸ் கிருமிகளின் தாக்குதலுக்கு உள்ளானது தெரியவந்தது. உடலின் நோய் எதிர்ப்புத்திறன் குறையும் போதே இந்த வைரஸ் கிருமிகள் மனிதனைத் தாக்குகிறது. போட்டிக்குத் தங்களைத் தயார் செய்யும் காலத்தில் கடும் உடற்பயிற்சிகளில் ஈடுபட்டதன் விளைவாக உடலின் நோய் எதிர்ப்புத்திறன் குறைந்து வைரஸ் கிருமிகளின் தாக்குதலுக்கு அவர்கள் உள்ளாகி உள்ளனர் எனும் முடிவிற்கு ஆய்வாளர்கள் வந்தனர். மேலும் ஆய்வில் வாரத்திற்கு 60 மைலுக்கும் மேற்பட்ட தூரத்தினை ஓடி பயிற்சி செய்தவர்களுக்கு, வாரத்திற்கு 20 மைல் தூரத்தினை ஓடி பயிற்சி செய்தவர்களைக் காட்டிலும் அதிக அளவில் நோய் ஏற்பட்டிருக்கிறது.

கடும் உடற்பயிற்சிகளுக்குப் பிறகு அவர்களின் இரத்தத்தினை பரிசோதனை செய்த போது, இரத்தத்தில் கார்டிசால் எனும் நாளமில்லா சுரப்பு நீர்**(Hormone)** 60 சதவீதம் அளவிற்கு அதிகரித்திருந்தது தெரியவந்தது. இந்த சுரப்பு நீரே உடலின் நோய் எதிர்ப்புத்திறனைக் குறைக்கும் வேலையைச் செய்கிறது அதுபோன்றே அவர்கள் உடலில் நோய்க்கிருமிகளை எதிர்த்துக் கொல்லும வெள்ளை அணுக்களில் 30 சதவீதம் எண்ணிக்கை குறைந்ததும் தெரிந்தது.

எனவே நோய்க் கிருமிகள் அதிக எதிர்ப்பின்றி உடலினுள் நுழையும் வாய்ப்புள்ளது.

ஆனால் மிதமான உடற்பயி

**டாக்டர்**
**ஐ.சிவசுப்ரமணியம்**

சிற்குப் பிறகு உடலின் எல்லாப் பாகங்களுக்கும் இரத்த ஓட்டம் சீராகப் பரவி உடலில் நோய் எதிர்ப்புத் திறனைத் தூண்டும் பீட்டா என்டார்பின் **(Beta endorphin)** எனும் பொருள் அதிகரிக்கிறது.

மேலும் இரத்தக் கொதிப்பு, இதய நோய், பிறவிகுறை நோய்கள், நீரிழிவு போன்றவற்றால் அவதிப்படுபவர்கள் முறையான மருத்துவர் அனுமதி இன்றி உடற்பயிற்சிகளில் ஈடுபடக் கூடாது. அளவிற்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு எனும் தமிழ்ப் பழமொழியான உடற்பயிற்சி மேற்கொள்பவர்கள் கவனத்திற் கொள்ளுதல் மிக நன்று. □

# இன்று ஒரு தகவல்

## மனச்சோர்வு

"வரவர என் மதே எனக்கு நம்பிக்கை இல்லை சார் "என்று சொன்னார் ஒருவர். சரி... சார் வேதாந்தியாக ஆகிவிட்டார் போலிருக்கிறது என்று நாம் நினைத்து விடக் கூடாது. அவருக்கு தன்னம்பிக்கை குறைய ஆரம்பித்து விட்டது என்று அர்த்தம். அது மிகவும் ஆபத்து அதை அப்படியே விட்டு விடக் கூடாது. உடனடியாகப் பரிகாரம் தேட வேண்டும்.

இன்று பலருக்கு மனம் சுலபமாக ஓய்ந்து விடும். எதைப் பார்த்தாலும் அலுப்பாக இருக்கிறது, அயர்வாக இருக்கிறது, எதிலும் கலந்துகொள்வதில் உற்சாகமில்லை மனச் சோர்வு வந்துவடும் . மனச்சோர்வு தருவதற்கு மருந்து என்ன? அதைத் தான் இன்று சொல்லப் போகிறேன் உடனே அந்த மருந்து எந்தக் கடையில் கிடைக்கும் சொல்லுங்கள் என்று கிளம்பி விடாதர்கள். மருந்துக் கடையில் இல்லை நம்மிடம் தான் உள்ளது. கடையில் போய் இதற்கு மருந்து கேட்டீர்களா னால் அங்கிருப்பவர் உங்களிடம் இருந்தால் எனக்கும் கொஞ்சம் கொடுங்கள்? என்பார் ஏனென்றால் இதற்கு அவ் வளவு டிமான்ட் இருக்கிறது இப்போது.

ஆள்பாதி ஆடைபாதி என்று சொல்கிறோமல்லவா? அது சரி அல்ல. ஆள் கால்,ஆடைமுக்கால் இது தான் சரி. நல்ல துணிமணிகள் தன்னம்பிக்கையை அதிகரிக்க உதவுகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் அதனால் முடிந்தள விற்கு நன்றாக உடுத்தவேண்டும்.

அடுத்த நிறைய விடயங்களைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அது உபயோகப்படுகிறதா இல்லையா? என்று நமக்கு கவலை வேண்டாம். அது தன்னம்பிக்கையை வளர்க்கிறது என ஆய்வுகள் மூலம் நிருபணமாகியுள்ளது. ஒவ்வொரு நாளும் புதிதாக ஒரு விடயத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று சபதம் எடுத்துக்கொள்ளுங்கள்.

ஒரு முக்கியமான விடயம் உங்களை யாராவது அலட்சியப் படுத்துகின்றனரா? அவர்கள் உள்ள திசையில் தலை வைத் துக்கூடப் படுக்கவேண்டாம். உங்களை யாராவது மட்டம் தட்டுகிறார்களா? உங்கள் மனம் சோர்ந்து போவது போல் யாராவது நடந்து கொள்கின்றனரா அவர்களையெல்லாம் உதறித்தள்ளுங்கள். இரக்கமே காட்டாதர்கள். என்ன சார் அவர்கள் மட்டும் உயர்ந்தவர்களா? எல்லோரும் ஒரே மாதிரி தான் இந்த உலகத்தில் பிறந்திருக்கிறோம் அதனால் அலட் சியப்படுத்துபவர்களை மனதார அலட்சியப்படுத்திப் பாருங்கள் அதன்பின் நங்கள் தான் ராஜா!

உங்களுக்கே பிடிக்காத விடயங்கள் ஏதாவது உங்களி டம் உள்ளதா? பரவாயில்லை... உடனே ஒதுக்கித் தள்ளுங் கள் அதை உங்கள் எடையைக் குறைக்க வேண்டுமா? உடற்பயிற்சி ஆரம்பிக்க வேண்டுமா? குடிப்பழக்கத்தை நிறுத்த வேண்டுமா? எதுவாக இருந்தாலும் உடன் நட வடிக்கை எடுங்கள். ஒத்திப்போட வேண்டாம். உங்களை வேதனைப்படுத்தும் விடயம் எதுவாக இருப்பினும் சரி அதைப் பற்றிப் பேசுவதையே உடனே நிறுத்தி விடுங்கள்.

உங்களால் சர்செய்ய முடியாத சில இருக்கும். அவற்றை அப்படியே ஏற்றுக்கெரள்வது தான் நல்லது. உயரம் ஆறு அடி இருக்கிறேன். அதை நான்கு அடியாக குறைக்கவேண்டும் என்று நினைக்கக் கூடாது? அது எப்படி முடியும்? உறவினர் கள் இப்படி இருக்கின்றனரே என்ற கவலை சிலருக்கு இருக்கும். அவர்கள் அப்படித் தான் அப்படியே விட்டுவிடுங் கள். உங்களிடம் நிவர்த்தி செய்ய முடியாத சில குறைகள் இருக்கலாம். அப்படிப்பட்ட குறையுடன் வாழ்வில் முன்னேறிய வர்களைப் பற்றி அறிந்து கொண்டு அவர்கள் செய்த சாதனை கள் பற்றி எண்ணுங்கள் அது உங்களை உற்சாகப்படுத்தும்.

உங்களுக்கென்று ஏதாவது ஒரு தனித்தன்மை இருக்கும் அது எதுவென்று புரிந்து கொண்டு முழுதாக மனதை அதில் செலுத்துங்கள். உங்களுக்கென்று ஏதாவது ஒரு சிறப்பம் சம் இருக்கும். அழகிய கண்கள், கருப்பான கூந்தல், நள மான விரல் , லேசான புன்னகை, நுட்பமான புத்திசாலித் தனம் இப்படி ஏதாவது இருக்கும். அதை மெதுவாகக் கண்டு பிடிக்க வேண்டும். அதைப்பற்றிய உணர்வுடன் சிறப்பாக வெளிப்படுத்த வேண்டும். எப்போதாவது மனம் சோர்ந்து போனால் உங்கள் தனித்தன்மையில் மனதைச் செலுத் துங்கள் சரியாகிவிடும்.

மிகவும் கட்டுப்பாடாக இருப்பவர்கள் மிகவும் ஆர்ப்பாட்ட மாக இருப்பவர்கள் எல்லோரும் உள்ளுர குமைந்து கொண் டிருப்பவர்களாம். சார்... ஒரு ரகசியம் உங்களைச் சுற்றி யிருப்பவர்கள் எல்லோரும் தன்னம்பிக்கை உள்ளவர்கள் என்று நினைத்துவிடாதர்கள். அவர்களுக்கும் உள்ளுக்குள் உதறல் தான். வெளியே நடித்துக் கொண்டிருப்பார்கள்.

அச்சம் தேவைதான். ஆனால் அதை வெளியே காட்டிக் கொண்டிருக்கக்கூடாது. மிகவும் அடக்கமாக இருக்கிறேன் என்று கூறிவிட்டு வட்டுக்குள்ளேயே இருக்காதர்கள். வெளியில வாருங்கள். தன்னம்பிக்கையுடன் இருக்கிறோம் என்று காட்டிக் கொள்வதற்காக கொஞ்சம் நடிப்பதில் கூடததவறில்லை தினமும் ஒரு விடயத்தை நிறைவாகச் செய்யுங்கள். அது சாதாரண அற்பவிஷயமாக இருந்தாலும் கூட எடுத்தகாரி யத்தைச் சிறப்பாக முடிக்க வேண்டும். அது ஒரு மன நிறை வைக் கொடுக்கும்.

மனச்சோர்வு நங்குவதற்கு ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ள வழிமுறைகளையெல்லாம் இப்போது உங்களிடம் கூறி விட் டேன். இதற்குப் பதிலாக நங்கள் ஒரு உதவி செய்ய வேண் டும் இந்த வழிமுறைகளைக் கடைப்பிடித்துப் பார்த்து விட்டு அதில் பலன் கிடைத்தால் ஒரு கடிதம் எழுதிப் போடுங்கள். ஏனென்றால் அதற்குப் பின்பு தான் அவற்றை நான் ஆரம்பிக்க வேண்டும்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# போரினால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கில் அபி.பணிகளை மேற்கொள்வது அவசியம்

## -தேசிய ஆலோசனை பேரவை

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங் களில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து அப்பகுதிகளை மேம்படுத்துவதற்கான அவசியம் தற்போது தோன்றியுள்ளதாக சமாதானத்திற் கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைப் பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கை கல்வி மன்றத்தில் நேற்று முன்தினம் நடை பெறற தேசிய ஆலோசனைப் பேரவை சிவில் சமூகக் குழு பிரதிநிதிகளின் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப் படடுள்ளது.

வடகசு -கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப் பதறகு, வடக்கு- கிழக்கு மாகாணசபை அதிகாரிகளிட மிருந்து யோசனை பெறுவதற்கும் தீமானிக்கப்பட்டுள்ளது.

இவ் யோசனைகளைப் பெறுவதன் அடிப்படையில் நிவாரணம், புனர்வாழ்வு,புனரமைப்புத் திட்டங்களைத் துரிதமாக முன்னெடுத்து செல்வதற்கும் வழிவகுக்கப் படும் என்று தொிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பு நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாகக் கூடி ஆராய்ந்த போதே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இந்தக் கூட்டத்தில் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிக் கப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டதுடன், அர சுக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சுக்ளை மீண்டும் ஆரம்பிக்க எடுக்கப்படவேண்டிய முயற்சிகள் குறித் தும் ஆராயப்பட்டுள்ளன. (ற-8)

# அரசைக் கவிழ்க்கும் ஐ.தே.க.வின் முயற்சிகள் பயனற்று போயுள்ளது

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பு

(கொழும்பு)

ஜககிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது வரவு- செலவுத் திட்டத்துடனேயே அரசு ஆட்டம் காணும் என்று கைதட்டிச சிரித்தவர்களும், தம்பட்டமடித்தவர்களு மான ஐக்கிய தேசியக் கட்சியினரும் இன்று வாய்மூடி மௌ னிகளாகியுளளனர்.

அதற்குக் காரணம் அக்கட்சியில் உள்ளவர்களில் பலர் அரசில் இணைந்துவிட்டார்கள் என்பதே. அரசின் இந்த சிறந்த வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க்கட்சியிலஉள்ள பலர் வரவேற்றுள்ளனர். வரவு-செலவுத்திட்டத் திற்கு முன்னரே எமது அரசாங்கம் போதிய பெரும பான்மைப் பலத்தைப் பெற்று விட்டது என வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித் துள்ளார்.

எனவே ஐக்கிய தேசியக்கட்சியினர் மக்களை தவறான வழியில் திசை திருப்பாமல் அரசின் நட வடிக்கைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

பேருவளை டிஎஸ.சேனநாயக்க தேசிய பாடசாலை யில் நடைபெற்ற 240வது மஹாபொல கண்காட்சி யில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

தபால் தொலைத்தொடர்புகள், மலையக அபி விருத்தி பிரதி அமைச்சர் ரோஹித்த அபேகுணவர் தன தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அமைச்சர் மேலும் கூறியதாவது, கிராமிய பொருளா தாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடனும, சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறைகளை மேம்படுத்தும் நோககுடனும் அரசு வரவு-செலவுத்திட்டத்தைத் தயா ரித்துள்ளது.

நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட மக்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.குறிப்பாக நாட் டின அபிவிருத்திக்கு சகல இன மக்களும் இன, மத, கட்சி பேதமின்றி பூரண பங்களிப்பை வழங்க முன் வரவேண்டும் என்றார். (க-9)

# இராசிபலன்

23.12.2004
(மார்கழி 8 வியாழக்கிழமை)
துவாதசி பி.ப. 3.57 மணிவரை
கார்த்திகை முழுவதும்
இராகுகாலம் 1.56- 3.26 மணிவரை
சுபநேரம் 7.56- 9.26 மணிவரை
கார்த்திகை விரதம்
பிரதோச விரதம்.
திருவெம்பாவை 6ம் நாள்

**மேடம்** கடுமையான வார்த்தை, காரிய தாமதம், பண விரயம், வேலைச்சுமை.

**இடபம்** தெய்வ சிந்தை, நல்ல முயற்சி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு.

**மிதுனம்** காரிய அலைச்சல், நித்திரைக் குறைவு, பண விரயம், வீண் மனஸ்தாபம்.

**கடகம்** பெருமையடைதல், குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், பணவருவாய்.

**சிங்கம்** செய்தொழில் விருத்தி, தெய்வ சிந்தை, உறவினர் சந்திப்பு, அதிகாரம்.

**கன்னி** புதிய திட்டமிடல், உடல் நலக் குறைவு, காரிய அனுகூலம், பணக் குறைவு.

**துலாம்** பிரயாண பயம், நண்பர்கள் விரோ தம், முயற்சி கைகூடும், போசன சுகம்.

**விருச்சிகம்** களஸ்திர நன்மை, பிரயாண நன்மை, காரிய சித்தி, நல்ல செய்தி.

**தனுசு** சுவாரஸ்யம், தேகநலன், கல் வியில் ஆர்வம், தடைப்பட்ட காரியம் கைகூடும்.

**மகரம்** வியாபார நன்மை, தாழ்ந்த சுபா வம், பணக்குறைவு, உடல் நலக்குறைவு.

**கும்பம்** தாய்வழி உறவு, முயற்சி தாமதம், ஆரோக்கியக் குறைவு, புதிய தகவல்.

**மீனம்** சுவாரஸ்யம், காரிய அனுகூலம், உறவினர் சந்திப்பு, போசன சுகம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

# மன்னார் - பேசாலைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அட்டகாசம்

(மன்னார்)

மன்னார் பேசாலைக் கடற்பரப்பில் நேற்று முன் தினம இரவு அத்துமீறி பிரவேசித்த இந்திய மீனவப் படகுகள் இலங்கை மீனவர்களின் படகுகளையும், மீன் பிடி வலைகளையும் சேதமாக்கியுள்ளன.

இச் சம்பவத்தையடுத்து இலங்கை மீனவர்கள் தொழி லைக் கைவிட்டு இடைநடுவில் கரை திரும்பினர்.

இந்திய மீனவப் படகுகளின தாக்குதலில் இலங்கை மீனவரின் ஒரு படகு சேதமடைந்ததினால் மீனவர் இருவர் ஒரு மணி நேரமாக கடலில் நீந்தி கரையை வந்தடைந்ததாக மீனவர்கள் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற கடறபடையினர் இந்திய மீனவர் களைத துரத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை தலை மன்னார் தலைமைப்பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி, மன்னார் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர், மாவட்ட உதவிக் கடற்றொழில் பணிப்பாளர் ஆகியோர் மேற் கொணடு வருகின்றனர். இவ்வாறான சம்பவங்கள் இதற்கு முன்னரும் நடைபெற்றமை இங்கு குறிப்பிடத் தக்கது. (ற-8)

# வறுமைப்பட்ட மக்களுக்கு துமிந்த சில்வா பல்வேறு உதவி

(கொழும்பு)

மேல மாகாணசபை உறுப்பினர் துமிந்த சில் வாவின் நான்காவது வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத் தின் கீழ் கொழும்பு குணசிங்கபுரவில் அமைக் கப்பட்ட 2 ஆயிரம் வீடுகள் அண்மையில் உரிமை யாளர்களுக்கு கையளிக்கப்பட்டன.

ஏற்கனவே,இத்திட்டத்தின் கீழ் கொலன்னாவ கடுவல,கேட்டை ஆகிய இடங்களில் துமிந்த சில்வா வினால் வீடுகள் அமைக்கப்பட்டு வறுமைக் கோட் டின் கீழ் வாழும் மக்களுக்குக் கையளிக்கப்பட்டன. இதேவேளை, இந்நிகழ்வின் போது மூன்றாம் கட்டமாக யுவதிகளுக்குத் தையல் இயந்திரங்களைக் கைய ளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இதற்கிடையில், இளைஞர்கள் மத்தியில் விளை யாட்டுத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டு விளை யாட்டு உபகரணங்களையும்,பளுதூக்கும் இயந் திரங்களையும் துமிந்த சில்வா வழங்கியுள்ளார்.

உலர்உணவு நிவாரணங்கள், பாடசாலை உபகரணங் கள, சீருடைகள் என்பனவும் வருமானம் குறைந்த குடும் பங்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

# செய்தித்துளிகள்

## கோரிக்கை

(தனங்கிளப்பு)

தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய பகுதிகளில் உள்ள இராணுவ அதஉயர் பாதுகாப்பு வலயங்களுள் தஞ்சம் புகுந்து வாழ்ந்துவரும் கட்டாககாலி மாடுகள் மேய்ச்சலுக்காக நுணாவில் பகுதிக்கு வரும் போது அவற்றை பொது மக்கள் கையகப்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பொதுமக்களது இந் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ப-37)

## பொருட்களை வழங்குக!

(யாழ்ப்பாணம்)

'கிழக்கின் வெள்ள அனர்த்தத்திற்கு வடக்கு உறவுகளின் உதவிப் பயணம்' என்ற திட்டத்திற்காகத் தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட, வலய பிரதேச மற்றும் ஊரகக் கிளை உறுப்பினர்களை உதவு பொருட்களை வழங்குமாறு தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலாளர் சொலமன் சூ.சிறில் கேட்டுள்ளார். (க)

## ஓய்வூதியக் கொடுப்பனவுத் திகதிகள் அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்தாண்டுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் திகதிகள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனவரி-12, பெப்ரவரி-10, மார்ச்சி, 10, ஏப்ரல் -7, மே-12, யூன்-9, யூலை-12, ஆகஸ்ட் 11, செப்ரெம்பர்-8, ஒக்டோபர் -6, நவம்பர் -10, டிசம்பர் -8 ஆகிய திகதிகளிலேயே இக் கொடுப்பனவு வழங்கப்படும்.

இதேவேளை, ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் நிலவுகின்ற முரண்பாடுகளை விரைவில் தீர்த்து வைப்பதாகப் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட உறுதியளித்துள்ளார். (ற-5)

## பயிற்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியில் இயங்கும் தொழில் பயிற்சி நிலையத்தில் சிறுவர்களுக்கான கணனி மற்றும் ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்களும் பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்குமான ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படடவுள்ளது.

எனவே, இதில் கலந்துகொள்ள விரும்புவோரை உடன் தொடர்பு கொள்ளும்படி பதிவாளர் ஜெயக்குமார்கேட்டுள்ளார். (ப-29)

## தொழிற்சாலையில் குளோரின் வாயுக் கசிவு 40 பேருக்குப் பாதிப்பு

(கொழும்பு)

அபிசாவளை சீதாவாக்கபுரக் கைத்தொழிற் பேட்டையில் தொழில் புரிந்து வந்த 40 ஊழியர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொழிற்சாலையில் குளோரின் வாயுக்குழாய் ஒன்றில் ஏற்பட்ட கசிவு காரணமாகவே இந்த ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## போயா ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5.00 மணிக்கு நகர சங்கீர்த்தனததுடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்று ஓம் காரம், காயத்திரி ஜெபம், பஜனை, யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராஜாவின் சிறப்புச் சொற்பொழிவு ஆகியன இடம்பெற்று நண்பகல் நாராயண சேவையுடன் நிகழ்வு நிறைவடையும். (ற)

## சட்டவிரோதமாக அரச சாராயம் விற்றவருக்குத் தண்டம் விதிப்பு

அரச சாராயத்தை அனுமதியின்றி விற்ற குற்றத்திற்காக தொண்டைமானாற்றைச் சேர்ந்த ஒருவருக்கு பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் ரூபா 10 ஆயிரம் தண்டம் விதிப்பதுடன், செலுத்தத் தவறும பட்சத்தில் 6 மாதம் சிறைத் தண்டனையையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

அத்துடன், பருத்தித்துறையைச சேர்ந்த பெண் ஒருவருக்கும் இதே குற்றத்திற்காக 3 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (க-101)

## மகேஸ்வர பூஜை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணாலிங்கேஸ்வரர் கண்ணாகாம்பிகா ஆலயத்தில் எதிர்வரும் 28 ஆம திகதி காலை 6.00 மணிக்குத் திருவாசக முற்றோதல் நடைபெற்று மகேஸ்வர பூஜையும் இடம்பெறும். (ப-39)

## மண் அகழ்வு

(கோவிலாக்கண்டி)

தென்மராட்சி கைதடி நாவற்குழி தெற்கில் அநாதரவான தோட்டக்காணிக்குள் மண் அகழ்வு இரவு வேளைகளில் இடம்பெறுகின்றன.

இது குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.(ப-129)

## பட்டங்கள்

(பொலிகண்டி)

வடமராட்சியின் பல பகுதிகளில் இரவு வேளைகளில் மின் குமிழ்கள் பொருத்தப்பட்ட பட்டங்கள் பறக்கவிடப்பட்டுள்ளன.

இப் பகுதிகளில் ஒன்றின் பின் ஒன்றாக பல தொடுகைப் பட்டங்கள் பலவர்ணங்களில் பறக்க விடப்பட்டுள்ளமை கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது. (ப-106)

## கண்காட்சி

(பொலிகண்டி)

சிறுவர்களுக்கான மாபெரும் கண்காட்சி ஒன்று இன்றும் நாளையும் பி.பி.எஸ்.கிராமக்கோட்டடி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியினைக் கண்டு சிறுவர்களைப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ற-106)

## வெள்ள நிவாரணம்

(மட்டக்களப்பு)

காத்தான்குடி முஸ்லிம் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 500 பேருக்கு நேற்று மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர் அமைப்பின் வேண்டுதலின் பேரில் உலர் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

காத்தாக்குடிப் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பளில் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாணத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் செசீர், இணைப்பதிகாரி எம்.புவநேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வு தமிழ்-முஸ்லிம் ஒற்றுமைக்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டாகுமென்பது குறிப்பிடத்தக்கது.(க-4)

## துர்நாற்றம் வீசுகிறது

(துன்னாலை)

புதுத்தோட்டக் கிராமத்துக்கும் ஞானாச்சாரியார் கல்லூரிக்குமிடையில் உள்ள வீதியில் கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது.

இதனால், அப்பகுதிமக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். (ப-113)

## வீதி திருத்தம்

(கற்கோவளம்)

பருத்தித்துறை ஓடக்கரை வீதியைப் புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வீதி அண்மையில் பெய்த தொடர் மழையினால் சேறும், சகதியுமாக இருந்தமையும் இதனால் பெரும் சிரமங்களுக்குள்ளானதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-104)

# நீதிமன்றை அவமதிப்பது குற்றமாயின் ஜனாதிபதியே முதலாவது குற்றவாளி

## ரணில் விக்கிரம சிங்க



(கொழும்பு)

நாங்கள் நடாத்திவரும் போராட்டம் சிறைவாசம் அனுபவித்து வரும் எஸ்.பி.திஸநாயக்கவின் விடுதலைக்காக மட்டுமல்ல. இந்த நாட்டு மக்களை ஜனாதிபதியின் சர்வாதிகார ஆட்சியில் இருந்து மீட்பதற்குமான போராட்டம் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் எஸ்.பி.யின் விடுதலையை வலியுறுத்தி நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உண்மையிலேயே நீதிமன்றத்தை அவமதித்தது குற்றமாயின், நீதிபதிகள் இலஞ்சம்வாங்குவதாக ஜனாதிபதி கூறியிருப்பது அதனைவிட மிக மோசமான குற்றமாகும்.

அப்படியானால், ஜனாதிபதியே முதலாவது குற்றவாளியாகும் எனச் சுட்டிக்காட்டினார். (ற-4)

# வள ஆளணியினருக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தொழில்துறைத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் பைப பொருத்துநர், மோட்டார் சைக்கிள், உழவு இயந்திரம், தொலைக்காட்சி, வானொலிப பொட்டி, ஓட்டோ, தையல் இயந்திரம் திருத்துநர்கள் ஆகியவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப் படவிருந்தன.

எனினும், இப் பயிற்சியை நடத்துவதற்கு வள ஆளணியினர் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் பயிற்றுவிப்பாளர்களை நியமிப்பதற்கு இவ் அலுவலகம் முன்வந்துள்ளது.

எனவே, மேற்படி பயிற்சிகளை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்குத் தகுதியானவர்கள், தமது விபரங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாகத் தொழில்துறைத் திணைக்களத்தின் .யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

எனவே, ஒப்பந்த அடிப்படையில் பயிற்றுவிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர், மேற்படி பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும் தினம் அறிவிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-19)

# யுத்த நிறுத்த உடன்படிக்கை செயலிழக்க வாய்ப்பில்லை

## அமெ.தூதரக பிரதித்தலைமை அதிகாரி

(திருகோணமலை)

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கை செயலற்றுப் போவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்று அமெரிக்க ராஜதந்திரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மிஹிந்தபுரத்தில் தொழில்நுட்பக் கல்லூரிக்காக அமைக்கப்படவுள்ள புதிய கட்டிட அடிக்கல் நாட்டுவிழாவில் கலந்து கொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகப் பிரதித் தலைமை அதிகாரி ஜேம்ஸ் இஸற். அன்ரி வைஸ்ரிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இவ்விழாவில் உரையாற்றும் போது 'இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தம் செயலற்றுப் போய்விடுமென எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

நிரந்தர சமாதானத்தை ஏற்படுததுவதற்குரிய அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்குமென்றும் அவர் கூறினார்.

அமெரிக்க உதவி நிறுவனத்தால் 8 இலட்சத்து 70 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவில் திருகோணமலை மாவட்ட இளைஞர் - யுவதிகளுக்கு 55 உதவி வழங்கும் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

# ஜயலத் ஜயவர்தனவின் முயற்சி; மடு மாதா தேவாலய முகாமின் குறைபாடு நிவிர்த்திக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்கு விஜயம் செய்த பாராளுமனற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன, சிங்கப்பூர் பேராயர் இல்லத்தில் வைத்து சிங்கப்பூர் பேராயர் அதிவணநிகலஸ் சியா அவர்களை சந்தித்து முக்கிய விடயங்கள் குறித்துப் பேசினார்.

இலங்கை கத்தோலிக்கர்களின் கௌரவத்திற்கும், அன்பிற்கும் பாத்திரமான புண்ணிய பூமியான 600 ஆண்டுகள் வரலாற்றுப் பழமை வாய்ந்த மடுமாதா தேவாலய முகாமின் குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக சிங்கப்பூர் பேராயர் உட்பட அந்நாட்டு கத்தோலிக்கர்களின் ஒத்துழைப்பை ஜயலத் ஜயவர்த்தன வேண்டியுள்ளார்.

டாக்டர் ஜயலத் ஜயவர்தன இவ்வாறு தனிப்பட்ட முறையில் விடுத்த வேண்டுகோளுக்கு சிங்கப்பூர் பேராயரிடமிருந்து நல்ல பிரதிபலன் கிடைத்துள்ளது. அண்மையில் சிங்கப்பூர் பேராயர் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

ஜயலத் இவ்வாறு சிங்கப்பூர் பேராயரிடம் தனிப்பட்ட முறையில், சுயவிருப்பத்தோடு செய்த வேண்டுகோள் குறித்து இலங்கை திரும்பியதும் மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப்பிற்கு அறிவித்துள்ளார்.

20 வருடகால வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக மடுமாதா தேவாலய முகாம் பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் சீராக இல்லாதபோது, 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்களாக மடுமாதா தேவாலய முகாம் வடக்கு-கிழக்கு அகதிகளுக்கான அகதிமுகாமாகப் பயனபடுத்துவதற்கு மன்னார் பேராயர் அதி.வண.இராயப்பு ஜோசப் அவர்கள் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# வான் கதவு திறந்தமையால் விவசாயிகளுக்கு பெரும்பாதிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக கந்தளாய்க் குளத்தின் நீர்மட்டம் அதிகரித்ததால் அதன் வான் கதவுகள் திறந்து விடப்பட்டிருக்கின்றன.

இதன் காரணமாக ஆயிரக் கணக்கான விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கந்தளாய்க் குளத்தின் ஒன்பது வான் கதவுகள் திறந்துவிடப்பட்டதன் காரணமாக கிண்ணியா கமநல மத்திய நிலையப் பிரிவுக்குட்பட்ட குரங்குபாஞ்சான், பூவரசந்தீவு, பட்டியனூர், சுங்காங்குளி, வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற் காணிகள், மேட்டு நிலப் பயிர்க் காணிகள் என்பன நீரில் மூழ்கியுள்ளன.

குறிஞ்சாக கேணி கமநலப் பிரிவில், வானாறு, பணிச்சான் குளம், ஆயிலடி சுரங்கல், மணியஸ்தன் குளம் ஆகிய பகுதிகளிலுள்ள விவசாய நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## மர நடுகை

வேலணைப் பிரதேச சபை புங்குடுதீவு உப அலுவலகத்தினால் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நிழல்தரு மரங்களான மலை வேம்பு, சவுக்கு, இலுப்பை, மருது போன்ற மரங்கள் விரைவில் நடுகை செய்யப்படவுள்ளதாகப் புங்குடுதீவு உப அலுவலக பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (க-126)

மீள்பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

17

இனும் சில ஐயமறுப்பாம் என்னை? வல்லிபுரத்திலே சிங்கை நகர் இருந்தாலும் அங்கே வாலசிங்கன் இருந்தாலும் அப்பாணன் தான் கடல் தாண்டிவந்த பாடலை-அம்மன்னன் சிலையேந்தியபாடலைப் பாடியிருப்பான்தானே நவீர் செங்கடக நகர் என்று செப்புவதேன் என்னின் இவ்வினா சாசன முதலியனவாக யாம் மேலே காட்டிய நியாயக் கோட்பாடுகளை விளங்காமல் எழுந்ததாம் அன்றியும் அவர் சுட்டும் சிங்கைநகர் (யா.ச. காரர் யா.வை. வி.காரர்) கலிங்கமாகனால் 13 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதாக வன்றோ சொல்லுகின்றனர் எனவே 8ஆம் நூற்றாண்டில் இருந்த உக்கிரசிங்கன் அவன் காலத்துக்கு 5 நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தோன்றிய நகர்க்கு எப்படி மாற்ற முடியும் அவனே செங்கடக நகரை கட்டினான் என்னும் போது அவன் காலத்துண்டான தலைநகர்க்கன்றோ அவனால் மாற்றமுடியும். எனவே அது செங்கடக நகரமென்க நிற்க.

நன்று இன்னும் பாணன் கண்டி அரசனையோ அநுராதபுர அரசனையோ பாடவில்லை என்பது நன்கு தெரிக்குதும் வாலசிங்கன் சோழ இராசகுமாரத்தி மகள் பாணன் சோழ நாட்டவன் இருவரும் ஒருவரை ஒருவர் நன்கறிந்திருக்கிறார்கள். பாணன் இவனைப் பாடிப் பரிசில் பெற நெடுநாளாகக் காத்திருக்கிறான். அதற்காக அவன் மேல் ஒரு பிரபந்தம் பாடிக்கொண்டு வந்திருக்கிறான் அரசன் பாணன் பெரும் புலவன் என்பதோடு ஞானதிருஷ்டியாகப் பாடக்கூடியவன் இதை அரசன் அறிந்திருக்கிறான். புலவர் செங்கடக நகரிக்கு வருகை தருவதை அறிந்த அரசன் புலவனது ஞானதிருஷ்டியைச் சோதிப்பான். ஒரு திரைசலையை இடு வித்து அதன் நடுவண் அமர்ந்திருந்தான்.

புலவர் தம் கண்சுத்திப் பாடலாக நரை கோட்டினங்கன்று நல்வளநாடு நயந்தனிப்பான், விரையு,ட்டும் தார்ப்புய வெற்பழ மன்னனென்றே விரும்பி கரையோட்டமாக மரக்கலம் போட்டுனைக் காணவந்தால் ,திரைபோட்டடிருந்தனையோ வாலசிங்க சிகாமணியே என்று பாடினார். இப்பாடலால் அந்தகனாக இருந்தும் திரைபோட்டிருந்ததைத் தெரிந்துகொண்டதும் அவ்வரசன் இருந்த நகர் கரையோட்டமாக மரக்கலம் போட்டுக் காண்க. கூடியதாகவுள்ள இடமாய் அது செங்கடக நகருக்குப் பொருத்தமாக இருப்பதை உணர்க. அப்பால் அரசன் அடுத்த செங்கையாக அம்பையும் வில்லையும் தாங்கி இருந்ததாகவும் அதனையும் புலவர் வாழுமிலங்கைக் கோமானில்லை மாாசனாகிய மானில்லை ஏழு மராமரமில்லை ஏன் வில்லையும் அம்பையும் தாங்கினாய் என்று கேட்டதோடு ஆழிஅலை அடைத்த வெற் புயத்து ஆதித்தா என்றதால் அரசன் இருந்தது கடற்கரை பட்டினமும் அவன் சூரியகுலத்தரசன் என்பதும் வலியுறுகின்றது. அப்பாணன் செங்கடகநகரில் பாடிப் பரிசு பெற்றான் என்பது உறுதியாகிறது. புலவர் நரைகோட்டிளங்கன்று நல்வளநாடு நயந்தனிப்பாய் என்று வந்தேன் என்பதாலும் அரசன் புலவரை பு,ர்வபுண்ணிய வசத்தினாலலே கச்சியிலே தன் நெஞ்சை ஏடாகக் கற்றான். முத்தமிழையும் என்பதாலும் இவர்கள் தம்முள் அன்பினர் என்று தெரிகிறது ஆகையாற்றான் அவன் பிரபந்தம் பாடிக் கொண்டு வந்தான். புலவனைக் குடியேற்றினால் நாடு பெருமை அடைவதோடு சோழநாட்டு மக்களைக் குடியேற்றவும் அவன் உதவி கிடைக்குமென்று அவன் எண்ணியிருக்கலாம்.

வாலசிங்கன் பாணனுக்குப் பரிசிலாகக் கொடுக்கப்பட்ட வட இலங்கையின் வடகழ்ப்பாகத்திலே வல்லிபுரம் இருக்கிறது. அதுவே செங்கடக நகரி இருந்த இடம் அங்கே வந்து தன்னைப்பாடிய கவிஞனுக்கு அவன் கொடுக்கக் கூடியதாக இருந்த இடம் அச் செங்கடக நகரிக்கும் கதிரைமலை இருந்த சுன்னாகத்துக்கும் ஒரு கோடிழுத்தால் அதற்கு வடக்கேயுள்ள பகுதியும் அதற்கு அண்மையில் உள்ள தென்பகுதியும் அவன் புழக்கத்தில் உள்ளவையகலாம். ஆகையால் அவைகளுக்குத் தெற்கே பண்ணைக்கடலுக்கு வடக்கே அந்நிலம் அவன் கொடுக்கக் கூடிய நிலமாக அமைந்ததாகலாம் அது மணலும் காடுமாயிருந்த மணற்பிரதேசமாக இருந்ததாக வைபவமாலை சொல்லியுள்ளது. இது நமக்கும் பொருத்தமே.

இவன் ஆட்சிக்காலத்திலே கதிரைமலையும் வ ழ்ந்து செங்கடகநகரியும் வழ்ந்து விடப்பட்டதால் நிலப்பிரபுவாக இருந்த இவன் முடிசூடா மன்னனாகி விட்டான் பிறர் தம் ஆராய்ச்சித் திறத்தால் தமிழ் நாட்டில் இருந்த செங்கடகநகர் யாழ்பாடியின் யாழ்ப்பாணநகர் என்பவைகளைக் காணாது விட்டனர். அதாவது அவர்கள் சொல்ல இயலாது விட்டு விட்டனர் யாழ்ப்பாணன் வாங்கியது மணற்றியை அவன் இறக்கும்போது அந்நிலம் யாழ்ப்பாணம் என்னும் பெயர் பெற்றது. அவன் ஆட்சியினால் தான் இப்பெயர் ஏற்பட்டது.

## 15.(ச) நல்லூர் இராச்சியம்

## நல்லூர்த்தலைநகர்க் காலம் கி.பி.948 -கி.பி.1620

நல்லூர் நகர் கட்டிய காலம் இலக்கிய சகாப்தம் 870 என்ற கி.பி. 948 (10 ஆம் நூற்றாண்டு) என்று சொல்லி இருக்கவும் என்னை பிறர் 13ஆம் நூற்றாண்டென்று சொல்லுகிறார்களே இஃதுதொரு வியப்பாக இருக்கே யார் இக்கருத்தை முதன் முதலில் வெளியிட்டவர் இவ்வுண்மையை இங்கே காண்போம்.

பாண்டிமழவன் ஜெயசிங்கையாரியனைச் சந்தித்து "பெருகு புகழ் யாழ்ப்பாணப் பேரரசு செய்ய வருகுதி என்று வணங்கினதும் அவ்வாறே அவனும் வந்து மதித்த வளங்கொள் வயல்செறி நல்லூரில் கதித்தமனை செய்ததும் இலக்கிய சகாப்தம் எண்னூற்றெழுபதாம் ஆண்டதெல்லை நலமிகு யாழ்ப்பாண நகரி கட்டியதும் ஐயமின்றி வெளியான செய்தியல்லவா? இம் முடிபை மறத்து வேறேதும் புதை பொருளாகவோ சிலாசனமாகவோ அன்றிவேறேதும் வழியாகவோ சான்றுகள் பெறப்பட்டனவா இல்லையே. இங்கே இலக்கிய சகாப்தம் எண்னூற்றெழுபது சாலிவாகன சகாப்தம் 870 என்று சொல்லப்படுகின்றது அது கிறஸ்தாப்தம் (870+78அதாவது கி.பி948) இத்தலைநகர் 13ஆம் நூற்றாண்டில் தான் கட்டப்பட்டதென்றும் அது கலிங்கமா கனைப் பாடிதென்றும் கலிங்கமாகனும் சிங்கையாரி ஒருவர் என்றும் பிறர் புரைபாடாக மொழிகின்றனர்.

கைலாயமாலை கி.பி. (948ஆம் ஆண்டில்)10ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது. கலிங்கமாகன் கி.பி.13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். கலிங்கமாகனை அந்நூலால் எப்படிப்பாட முடியும் அவன் பிறக்க 300 ஆண்டுகளுக்கு முன்னல்லவோ அந்நூல் பாடப்பட்டது. இம் மாகன் சிங்கையாரியன் என்றால் ஏன் ஆதாரம் காட்டி நிருபிக்கவில்லை இவன் பாடப்படும் பொழுது சக்கரவர்த்திப் பட்டத்தையும் கர்த்தி பிரதாபத்தையும் இழந்து தானே யாழ்ப்பாணம் வந்ததாக இப்பிறர் மேலே சொற்றனர் . அப்படி இழந்த ஒருவனை அவை உள்ள ஒருவனாக முத்து இராசர் பாடமாட்டாரே வைபவமாலையார் விஜய கூழங்கையன் என்றதும் பாண்டிமழவனால் வரவழைக்கப்பட்ட சிங்கையாரியனை அவர் கைலாயமாலையாலும் பிறநூல்களாலும் அவனைப் பற்றி அறிந்துள்ளார். அவர் ஒரு இடத்திலும் மாகனை விஜயகாலிங்கன் என்று சொல்லவில்லை. ஆதார நூல்களைக் கொண்டெழுதப்பட்ட வைபவமாலைக் கூற்றுக்கு இவர் சொல்லும் வாயாதாரம்.

(தொடரும்)

# ஆலயங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் பதினொரு இலட்சம் ரூபா நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள இந்து ஆலயங்களின் புனரமைப்பு மற்றும அறப்பணி நடவடிக்கைகளுக்காக தனது பங்களிப்பை வழங்கி வருகின்ற கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி ,கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, திருகோணமலை மாவட்டத்திலுள்ள இரு ஆலயங்களின் அறப்பணிகளுக்காக 11 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

'இதன் பிரகாரம் திருகோணமலை திருக்கடலூர் உபபுவெளி கேணியடி சின்னத்தொடுவாய் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திற்கு 5 இலட்சம் ரூபாவும் மனையாவெளி ஸ்ரீ திருச்சிற்றம்பலம் பிள்ளையார் ஆலயத்திற்கு 6 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி ஆலயங்களின் பரிபாலனச்சபை பிரதிநிதிகளிடம் நிதிக்கான காசோலைகள் அமைச்சரின் வாசஸ்தலத்தில் வைத்து அண்மையில் கையளிக்கப்பட்டன .

இவ வைபவத்தில் இந்து சமய கலாசார திணைக்களப பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசு மற்றும் அமைச்சின் இந்து சமய விவகாரங்களுக்கான ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)

# பாதாள உலகக் கும்பலுடன் '22 பொலிஸாருக்குத் தொடர்பு

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸார் 22 பேருக்கு பாதாள உலகக் கும்பல் மற்றும் போதைவஸ்துக் கடத்தல்காரர்கள் ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகள் உள்ள விடயம் அம்பலமாகியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் வட்டாரங்கள் இது தொடர்பாகத் தகவல் வெளியடுகையில, இப் பொலிஸார் தொடர்பாக பல ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு இவர்களுக்கு எதிராக விரைவில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது என்றும தெரிவித்துள்ளன.

பாதாள உல்கக்கும்பலிடம் பண உதவி, போக்குவரத்து வசதி, தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்துச்செல்வது உட்பட பல உதவிகளை இந்தப் பொலிஸாா பெற்றுள்ளமை விசாராணைகள் மூலம் தெரிய வந்துள்ளன.

இவ்வாறு விசாரணை வலையில் வீழ்ந்தவர்களில் மேல்மாகாணத்தைச் சேர்ந்த சிரேஷ்ட டி.ஐ.ஜி ஒருவா, டி.ஐ.ஜிக்கள் இருவா, எஸ்.எஸ்.பிக்கள மூவர், ஏ.எஸ்.பிக்கள் மூவர் மற்றும் ஓ.ஐ.சி ஐவரும் அடங்குவர் என்றும் தொிவிக்கப்படடுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை மற்றும் கொழும்பில் தொடாசசியாக நடைபெற்ற சில வன்முறைச் சம்பவங்களை அடுத்து பொலிஸ் விசாரணைகள் பல்வேறு துறைகளிலும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

# தென்னிலங்கையில் வைரஸ் காய்ச்சல்; கோழிக் குஞ்சுகளின் திசுக்கள் சோதனைக்காக வெளிநாட்டுக்கு!

(கொழும்பு)

தென்னிலங்கையில் பறவைக் காய்ச்சல்பீதி கிளம்பியிருப்பதை அடுத்து நூறு கோழிக் குஞ்சுகளின் திசுக்கள் சோதனைக்காக,முன்னெச்சாிக்கையுடன் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தென்பகுதியில் ஒன்பது நோயாளிகள் அண்மையில் மர்மமான வைரஸ் காய்ச்சலால் உயிாிழந்ததை அடுத்து சுகாதாரத்துறையினா இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் பிரதான தொற்றுநோய் வைத்திய நிபுணா இது தொடாபான ஆய்வுகூட சோதனையை மேற்கொணட பின்னா கருத்துத் தொிவிக்கையில்,

தற்போது பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் இருவரது தொற்றுக்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் ஒருவருக்கு இன்புளுவன்ஸா ஏ தாக்கமும் மற்றவருக்கு இன்புளுவன்ஸா பி தாக்கமும் ஏற்பட்டுள்ளது. ஆனால் "இன்புளுவன்ஸா எச்5 என்1" அல்ல.

இந்த மர்மக்காய்ச்சலால் இறந்த இருவரது சொநத இடத்துக்குச் சென்ற சுகாதார அமைச்சின் விசேட குழுவினா அங்கு அருகிலிருந்த கோழிப் பண்ணையிலுளள கோழிக்குஞ்சுகளின் திசுக்களை சோதனைக்காக எடுத்தனர்.

அவை தற்போது மேலதிக சோதனைக்காக வெளிநாட்டுக்கு அனுப்பப் பட்டுளளன. தற்போது பரவிவரும் இந்தக்காய்ச்சல் போன்று ஒரு நோய் இந்து சமுத்திரத்தில் உள்ள நாடுகளில் இதுவரை காலத்தில் வந்ததே இல்லை எனக் குறிப்பிட்டார். தற்போது இந்நோயால் பாதிக்கப்பட்டவாகள் எம்பிலிப்பிட்டியா, மாத்தறை ஆகிய வைத்தியசாலைகளில் சோக்கப்பட்டுள்ளனர்.

இருமல், காய்ச்சல், சுவாசிப்பதில் சிரமம் ஆகிய முன்னறிகுறிகளை உணருவோா உடனடியாக அருகிலுள்ள வைத்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வைத்திய நிபுணர்கள் அறிவித்துள்ளனர். (ற-4)

# காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரிகள் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். மாவட்ட முகவர்களுக்கான வருட இறுதிக்கூட்டம் நேற்று யாழ். பஸ்தியான் ஹோட்டலில் யாழ்பிராந்திய முகாமையாளர் திருமதி அரியநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் டேமியன் பெர்னாண்டோ, உதவி முகாமையாளர் சுமிந்த,அலோசன்,ஜெகத் ஹண்ட மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் சுரேஸ்பரமவிதான ஹே ஆகியோர் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இக்கூட்டத்தில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து முகவர்களுக்கு இவ்வதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டது. (ற-5)

# புலிகளுக்கு யுத்த உதவி வழங்க காரணம் என்ன? நோர்வேயிடம் ஜாதிக ஹெல உறுமய கேள்வி

## தெளிவுபடுத்தக் கோரி கடிதமும் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

பல்வேறு உலக்நாடுகளாலும் தடைசெய்யப்படடுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நிதி மற்றும் யுத்த உதவிகளை நோர்வே ஏன் வழங்குகின்றது என்பது குறித்து உடனடியாக நாட்டுமக்களுக்கு அறிவிக்கவேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரெட்ஸ்கருக்கு கடந்த திங்கட்கிழமை அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலியே ரதன தேரர் கையொப்பமிட்டு அனுபபியுள்ள இந்தக் கடிதத்தில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையை இரண்டாகப் பிரிப்பதற்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் புலிகளுக்கு நோர்வே அரசாங்கம் தொடர்ந்து உதவிகளைச் செய்துவருவதாகக் குற்றச்சாட்டு நிலவுகின்றது. கடந்த 18ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற ஜனநாயகமும், சமாதானமும் என்ற கருத்தரங்கில் நோர்வேயின சட்டவாதியொருவர் சில விடயங்களை முன்வைத்தார்.

நோர்வே நாடு புலிகளுக்கு யுத்தக கருவிகள், ஆலோசனைகள் என்பனவற்றை வழங்கியுள்ளது. தாய்லாந்து, மலேஷியா போனற நாடுகளில் புலிகளுககுக் கடற்பயிற்சிகளை நோர்வே வழங்கியுள்ளது. புலிகளுக்கு நிதியுதவிகளையும் வழங்கிவருகின்றது என்றும் கூறப்படுகின்றது.

இலங்கையில் சிங்கள மககளுக்குப் பாதகத்தை ஏற்படுத்த நோர்வே அதிகளவிலான நிதியைச் செலவிடுகின்றது. இந்த விடயங்கள் அந்த மாநாட்டில் வெளியிடப்பட்டன. எமக்குத் தெரிந்த வகையில் நோர்வே அரசாங்கம் இதற்கு முன்பு இஸ்ரேல் - பலஸ்தீன நாடுகளுககிடையில் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

ஆனால் அப்போது பலஸ்தீன விடுதலை அமைப்புக்கோ, ஹமாஸ் இயக்கத்துக்கோ யுத்த வடயங்கள் தொடர்பான உதவிகளைச் செய்ததாகத் தெரியவில்லை.

எனவே, புலிகளுக்கு மட்டும் ஏன் நோர்வே அரசாங்கம் இவ்வாறான உதவிகளை வழங்க வேண்டும் என்பது குறித்து நாட்டு மக்களுக்கு நோர்வே தெளிவுபடுத்தவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-4)

# நீதிபதி கொலைச் சூத்திரதாரி நௌபர் இரகசிய வாக்குமூலம்

(கொழும்பு)

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்மொகமட் நியாஸ நௌபர் நேற்றுமுன்தினம் நீதிபதி முன்னிலையில் இரகசியமான முறையில் வாக்குமூலம் அளித்தார்.

கொழும்பு பிரதமநீதிபதி சரோஜினி குசலா விஜயவர்த்தனா தனது வாசஸ்தலத்தில் வைத்து இவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்துகொண்டார்.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இவர் தனது வாக்குமூலத்தை அளித்தார். நீதிபதியின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 6 பேரும் பாதுகாப்பின் நிமித்தம் நேற்றுமுனதினம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவில்லை.

பிரதான சந்தேக நபரான மேறபடி நபர் வெலிக்கடை சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருப்பது பாதுகாப்பானது அல்ல என குற்றப் புலனாய்வுத்துறையினர் சமர்ப்பித்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி இவரை களுத்துறை சிறைச்சாலையில் தடுத்துவைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் 6 பேரையும் எதிர்வரும் 5ம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவும் நீதிபதியினால் பிறப்பிக்கப்பட்டது. (ச-04)

# சிறுவர்களுக்கான கல்வி மேம்பாட்டு நடவடிக்கை

(கல்வியங்காடு)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தில் சிறுவர் கல்வி பெறுவ்தில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம், மக்கள் நலன்காக்கும் பிரிவு போன்ற எட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் கலந்துகொண்டன.

இதன்போது 2005 தொடக்கம் 2008ஆம் ஆண்டுவரை நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் சிறுவர் கல்வி மேம்பாட்டு மேறபடி நிறுவனங்களுள், நான்கு நிறுவனங்களுடனான திட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வியை முன்னெடுக்கும் திட்டமாக இது அமைய இருக்கின்றது. (ப-74)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது சுகாதார அமைச்சர் நிமால் பாய்ச்சல்

(கொழும்பு)

இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்று கூறிக் கொண்டு பணியில் ஈடுபடும் சில அமைப்புக்கள் சுரண்டி வாழும் ஒட்டுண்ணிகளாகவே உள்ளன என்று சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

போதைவஸ்துப் பாவனைக்கு எதிரான அரச சார்பற்ற நிறுவனங்களின் அமைப்பு கொழும்பில் நடாத்திய கருத்தரங்குகளில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேறகண்டவாறு தெரிவித்தார்.

சுகாதாரத்துறையுடன் தொடர்புடைய 44 அரச சார்பற்ற நிறுவனங்களில் பன்னிரண்டுக்கும் மேற்பட்டவை சிறந்த திறனோ தமது கொள்கைகள் குறித்த் தெளிவோ இல்லாதவை. அரச சார்பற்ற நிறுவனங்கள் எல்லாவற்றையும் நம்பவேண்டாம் என்று உலகவங்கிப் பிரதிநிதிகளுக்கு நான் எவ்வளவோ எடுத்துக்கூறியும், உலகவங்கி தமது திட்டங்களை அமுல்படுத்துவதற்கு இந்த அமைப்புக்களையே பயன்படுத்துகின்றது.

இந்த அமைப்புக்கள் திட்டங்களை அமுல்படுத்தவெனப் பெருந்தொகையான பணத்தைப் பெறுகின்றன. அதில சிறு தொகையை உதவி செய்கின்றன. சிலவேளைகளில் அதுவும் இல்லை.

இந்த அமைப்புக்கள் எமது நாட்டு வளங்கள் அனைத்தையும அப்படியே உறிஞ்சிக்கொள்கின்றன. விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் என்ற பெயரில் கிராமப்புறங்களில் கூட்டங்களை நடததும இவர்கள், மக்களுக்குப் பிழையான தகவல்களையும் வழங்கி வருகிறார்கள். அவர்களைக் கண்காணிக்கவென ஒரு அமைச்சுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அதன்மூலம் இவர்களது பிழையான நடவடிக்கைகளை அவதானித்துவருகிறேன்.

தாங்கள் ஏதோ இங்கு அற்புதங்கள் நிகழ்த்துவதாகத் தமக்குள் நினைத்துக்கொள்ளும் இவர்கள் செய்வது ஒன்றுமே இல்லை. ஆகவே, ஒவ்வொருநாளும் அறிமுகமாகும் அமைப்புககளையெல்லாம் நாட்டுக்குள் அனுமதிக்காமல் சிறந்த - நன்மதிப்புள்ள அரச சார்பற்ற நிறுவனங்களை மாத்திரம் இங்கு பணியாற்றச் செய்யவேண்டும் என்று அமைசசர் மேலும் தெரிவித்தார். (ந-4)

# சுகாதாரத்துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டம் மூலம அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளஉயர்வு சுகாதாரத் துறை ஊழியர்களுக்கும் கிடைக்குமென சமஸ்த லங்கா சுக சேவசங்க செயலாளர் டாக்டர் ஆர்.எம்.டபிள்யூ.ரணசிங்க தெரிவித்திருக்கிறார்.

இதுதொடர்பாக திறைசேரி செயலாளருடன் பேசியதாகக் கூறிய அவர், முதல்கட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவை கூடுதலாக வழங்கத் திறைசேரி செயலாளர் இணக்கம் தெரிவித்ததாகக் கூறினார்.

இரண்டாவது கட்டத்தில் திஸ்ஸ தெய்வேந்திர ஆணைக் குழுவின் சிபாரிசுகளுக்கு அமைய சம்பள முரண்பாடுகளை நீககத் திறைசேரி செயலாளர் இணங்கியிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

வரவு செலவுத்திட்டம் மூலம் வழங்கப்படும் சம்பள உயர்வு, சுகாதார ஊழியாகளுககுக் கிடைக்காது என்ற குற்றச்சாட்டை அவர் நிராகரித்தார். (க-7)

# வடக்கு - கிழக்கு நெடுஞ்சாலைகள் ஜனவரியில் புனரமைக்கப்படும்?

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு நெடுஞ்சாலைகளின் புனரமைப்புப் பணிகளுக்கு என ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் 4 ஆயிரம் மில்லியன் ரூபா வழங்கியுள்ளதாகவும் இப்பணிகள் ஜனவரி மாதமளவில் ஆரம்பமாகவிருப்பதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வேலைத் தட்டத்தை ஜனவரி மாதமளவில ஆரமபிப்பதன் மூலம் 333 கிலோ மீற்றர் நீளமான நெடுஞ்சாலையைப் புனரமைக்கமுடியுமெனவும் கூறப்படுகின்றது.

மேலும், நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் பல வகுக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன் விரைவாகப் பயணிக்கக்கூடிய நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கும் மற்றும் சுரங்கப் பாதைகளை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாத்தறை, கொடாவ மற்றும் கொழும்பு - கட்டுநாயகக அதிவேகப் பாதைகளின் நிர்மாணப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் சுமார் 89 பாலங்களை அமைக்கும் திட்டம ஆரம்பிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

## பயிற்சி

(மூளாய்)

மூளாய் சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் இருபாலாருக்குமான தொழில் பயிற்சிகளை வழங்கிவருகின்றது.

தையல், மேசன்வேலை, உணவுத் தயாரிப்புப் பயிற்சி, உணவு பதனிடல், கேக் ஐசிங் போன்ற பயிற்சி வகைகளை வழங்கிவருகின்றது.

இங்கு கடந்த ஒருவருட காலப்பகுதியில் கணிசமான அளவு பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-74)

## அன்பளிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்துக்கு டென்மார்க்கில் வசித்துவரும் முன்னால் சனசமூகநிலைய உறுப்பினரான சின்னையா மனோகரன 20ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளார். (க-126)

## கலந்துரையாடல்

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட சகல அதிபர், ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 27ஆம் திகதி காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 2005ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் பற்றி ஆராயப்படவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் வே.சி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ப-9)

## திருவாசக உரை

(யாழ்ப்பாணம்)

அரியாலை சரஸ்வதி அமமாள ஆலயத்தில் நாளை வெள்ளிக் கிழமை பி.ப. 5.00 மணிக்கு தமிழ தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் 'அழுதால உன்னைப் பெறலாமே' என்னும் தலைப்பில் திருவாசக உரை நிகழ்த்தவுள்ளார். (ற)

## இலையான் பெருக்கம்

(கல்வியங்காடு)

யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் அதிகமான வற்றில் இலையான்களின் பெருககம் அதிகம் காணப்படுகிறது.

இதற்கு உரியமுறையில் சுகாதாரம் பேணப்படாமையே காரணம் எனக் கோப்பாய பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் கண்ணதாசன் தெரிவித்தா. (ப-74)

## கூட்டம்

யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் விசேட நெறியாளர் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை 2.30 மணிக்கு சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ப-74)

### தீவக வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கு

# ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 2500 நூல்கள் வழங்கப்பட்டன

ஆசிய அபிவிருத்தி வங்கியின நிதி உதவியுடன் வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட 25 பாடசாலை நூலகங்களுக்குத் தலா 100 புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், நெடுந்தீவு றோ.க.மகளிர் வித்தியாலயம், புனித அந்தோனியார் கல்லூரி, கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலயம், கரம்பொன சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம், [illegible] மகா வித்தியாலயம், நாரந்தனை றோ.க. வித்தியாலயம், புனித மரியாள் பெண்கள் வித்தியாலயம், நாரந்தனை கணேசா வித்தியாலயம், தம்பாட்டி அ.த.க. பாடசாலை எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம், அந்தோனியார் வித்தியாலயம், ஊர்காவற்றுறை [illegible] சைவ வித்தியாலயம், புங்குடுதீவு மகாவித்தியாலயம், புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகாவித்தியாலயம், புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தியாலயம், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், மண்டைதீவு மகாவித்தியாலயம், வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், சரவணை நாகேஸவரி மகாவித்தியாலயம், வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் ஆகியன நூல் பொதிகளைப் பெற்றுக் கொண்டுள்ளன. (ப-126)

## உசுப்பிவிட்ட யானை போன்று விழித்துக் கொண்டது ஐ.தே.க.

(கொழும்பு)

நித்திரையிலிருந்து யானையை உசுப்பிவிட்டு அதனை நித்திரையிலிருந்து எழுப்பிவிட்டுள்ளது போன்று தற்போது ஜனாதிபதியின் உசுபபலால் தாம் எழுந்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் வீழ்ச்சிக்கு எஸ்.பி.திஸநாயக்க உள்ளிட்ட ஐ.தே.க.உறுப்பினர்களே காரணம் என்பதால் தன்மீதும் அவர் மீதும் ஜனாதிபதி பயம கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதனால்தான் எஸ்.பி.யை நீதித்துறையை அவமதித்தார் என்ற குற்றத்தின் பேரில் அவருக்கு இருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து சிறைக்கு அனுபபியுள்ளார். அடுத்து தன்மீதே ஜனாதிபதியின் கவனம் திரும்பியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-4)

## தாய்சேய் நலத்திட்ட சேவைகளில் சுகாதாரத் தொண்டர்களின் பணி மிகவும் அவசியமானதொன்றாகும்

### வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி வர்ணநாதன்

(சுதுமலை)

தாய்சேய் நலத்திட்ட சேவைகளில் கிராமிய சுகாதாரத் தொண்டர்களின் பணி மிகவும் அத்தியாவசியமானதொன்றாகும். இவ்வாறு மானிபபாய் சுகாதர வைத்திய அதிகாரி பணிமணையின் பொறுப்பதிகாரி க.வர்ணநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலர்பிரிவுகளில சேவை செய்யும் நூறிற்கும் மேற்பட்ட சுகாதாரத் தொண்டர்களிற்கு இரு பிரிவுகளாக யுனிசெவ் அனுசரணையுடன் விசேட பயிற்சிக் கலந்துரையாடல் ஒன்று சங்கானை அரசினர் வைத்திய சாலையில் நடைபெற்றது.

ஆரம்பநாள் நிகழ்வில் உரை நிகழ்த்தும்போது பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்ததாவது,

தற்போது எமது பிரிவில் உள்ள சகல தாய்சேய் நல சிகிச்சை நிலையங்களிலும் வெவ்வேறு போசாக் குணவுகள வழங்கப்பட்டு சிகிச்சைகளும் வழங்கப்பட்டுவருகின்றது.

ஆனால சிறுவர்களின் போசாக்கு நிலை குறைவாகவே காணப்படுவது கவலைதரும் விடயம். இதனால் உரிய போசாக்குணவு சரியாக சிறுவர்களை சென்றடைகிறதா என்பதை அவதானித்தல் அவசியமாகின்றது.

அத்துடன, சிறுவர்கள் அண்மையில் காயச்சல் நோய்களிற்கும் பல்வேறு தொற்றுநோய்களுக்கும் இலக்காகி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே சுகாதராத் தொண்டர்களின் வீட்டு விஜயம் மிகவும் அவசியம். அதுமட்டுமல்லாது எமது பகுதிகளில் இளவயது கர்ப்பங்களும், சட்டவிரோத கருச்சிதைவுகளும் அதிகரித்துள்ளது.

இதனால் தாய்க்கும், சேய்க்கும பல்வேறு பாதிப்புகள் ஏற்படக் கூடிய அபாயநிலை ஏற்படும். இது பறறிய விழிப்புணர்வை அவ்வப்பகுதி சுகாதர உத்தியோகத்தர்களுடன் இணைநது மேற்கொள்ளுவது மிகவும் அவசியமாகும் எனவும் தெரிவித்தா.

அத்துடன், அண்மையில் பெய்த மழை காரணமாக நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் சாததியக்கூறுகள் அதிகளவில் உள்ளதால் இதுபற்றி வீட்டு உரிமையாளர்களிற்கு தெரியப்படுத்துவது மிகவும் அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

தற்போது எமது பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் முகாம்கள் பல உள்ளன. அதில முக்கியமாக தாய்சேய் நலம் தொடர்பான விபரங்களை வாரத்தில் குறைநதது ஒருதடவையாவது தரிசிப்பு செய்வது மிகவும் அவசியம் எனவும் முகாம்களின் சுற்றாடலை துப்பரவாக வைத்திருப்பதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிக் கருத்தரங்கில் போசாக்கு மேம்பாடு, ஆரம்ப பிள்ளை பராமரிப்பும் விருத்தியும், இனவிருத்திச் சுகாதர மேம்பாட்டு செயற்றிட்டம் போன்ற விடங்களில் கருத்துரைகள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-252)

## ஹபராதுவவில் இரண்டாவது சர்வதேச விமான நிலையம்!

(கொழும்பு)

இலங்கையில் இரண்டாவது சர்வதேச விமானநிலையம் காலி மாவட்டத்தில் ஹபராதுவவில் அமையவுள்ளதாக துறைமுக விமானத் துறை பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க சர்வதே விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பயணிகளுக்கான புதிய கட்டடம் ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத தெரிவித்தார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் விமான நிலையத்தை அபிவிருத்திசெய்யும் தேவைகள் தற்போது ஏற்பட்டுள்ளது. பெருமளவு உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிப்பதாலும் இலங்கையில் சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கும் இன்னுமொரு சர்வதே விமானநிலையம் அவசியம் என உணரப்பட்டதன் காரணமாக ஹபராதுவப் பகுதியில் சர்வதேச விமான நிலையத்தை நிறுவுவதறகு நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது எனவும் குறிப்பிட்டார். (ற-5)

## மேஜர் முரளியின் 17ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

மேஜர் முரளியின் 17ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி இன்று வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு கோப்பாய்-உரும்பிராய வீதியிலுள்ள அவரது நினைவுத்தூபி முன்றலில் தமிழீழ மாணவர் ஒன்றியத் தலைவரின் தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது. (ற)

## புங்குடுதீவு மக்களின் குடிநீா பிரச்சினை இன்னும் தீரவில்லை

புங்குடுதீவு மக்களுக்கு பிரதேச சபையினால் வழங்கப்பட்டுவந்த குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டதால் அங்குள்ள மக்கள தமது குடிநீா தேவையினை பூர்த்திசெய்ய முடியாதநிலை ஏறபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லண்டன் வாழ் புங்குடுதீவு மககளினால் அன்பளிபபு செய்யப்பட்ட பவுசர் மூலம் அண்மையில் குடிநீர் விநியோகிக்கப்பட்டுவருவதையடுத்து பிரதேச சபையின் குறிப்பிட்ட பவுசர் மண்டைதீவுக்குக் குடிநீரை விநியோகஞ்செய்து வருகின்றது.

இதனால் புங்குடுதீவுக்கு பிரதேசசபையினால் வழங்கப்பட்டுவந்த குடிநீா நிறுத்தப்பட்டுள்ளது. இதன்காரணமாக தாம் போதியளவு குடிநீரைப பெற முடியாதுள்ளதாகவும் எனவே பிரதேசசபையூடாக வழங்கப்பட்டு வந்த குடிநீரை தொடர்ந்து வழங்குமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க.126)

## கைதடியில் மனித சங்கிலிப் போராட்டம்











# உணவகங்களுக்கு உரிமம் வழங்குவதற்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு கோரிக்கை

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் உணவு விற்பனை நிலையங்கள், உணவு உற்பத்தி நிலையங்கள, தொழிற்சாலைகள், குளிர்பான விற பனை நிலையங்கள் என்பனவற் றின் அடுத்தவருடத்திற்கான உரி மம் வழங்குவதற்குரிய விண்ணப்பப் படிவங்களை சம்பந்தப்பட்ட சுகா தார வைத்திய அதிகாரி பணி மனைகளுக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக் குமாறு கோரி யாழ்ப்பாணம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந் திரம் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர்க்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

பல விற்பனை நிலையங்கள் சுகாதார அனுமதி பெறப்படாது குறைபாடுகளுடன் உரிமம் இல் லாது இயங்கிவருவது பல இடங் களிலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனால் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையங்கள், உணவு உற்பத்தி நிலையங்களுக்கு எதிராக சட்ட நட வடிக்கை எடுக்கும்படி சகல பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக் கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மிக விரைவாக உரி மங்களை சம்பந்தப்பட்ட உளளூ ராட்சி மன்றங்களின் ஊடாகப் பெற் றுக்கொள்ளுவது வியாபார உரிமை யாளர்களின் பொறுப்பு எனவும் இதற்குரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வது அவசியம் என வும் அக்கடிதத்தில் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (க-252)

# நிவாரணம் வழங்கப்படாததை ஆட்சேபித்து வவு. இல் ஆர்ப்பாட்டம்

வவுனியா மாவட்டத்திலுள்ள சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் வாழும குடும்பங்கள் கடந்த மூன்று மாத காலமாக தமக்கு நிவார ணம் வழங்கப்படாததைக் கண் டித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத் தியுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் 600குடும் பங்களைச்சேர்ந்தோர் கலந்து கொண்டனர்.

யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து சிதம்பரபுரம் அகதிமுகாமில் வாழ்ந் துவரும் மக்கள் கடந்த மூன்று மாதங்களாக நிவாரணம் எதுவும் வழங்காததன் காரணமாக பெரும் நெருக்கடி நிலையில் வாழ்ந்து வரு கின்றனர்.

அதேவேளை, இவ் ஆர்ப்பாட் டத்தின் போது அங்கு விஜயம் செய்த வவுனியா மாவட்ட செய லகததிட்டமிடல் பணிப்பாளர் சிறிது நேரம் ஆர்ப்பாட்டக்காரர்களினால் தடுத்துவைக்கப்பட்டிருந்ததாகவும் பின்னர் அங்கு சென்ற பொலிஸார் திட்டப்பணிப்பாளரை மீட்டதாகவும் தெரியவருகிறது.

புனர்வாழ்வு அமைச்சிலிருந்து நிதி கிடைக்காததன் காரணமாகவே நிவாரணங்கள் வழங்கப்படவில்லை யென வவுனியா மாவட்ட அர சாங்க அதிபர் கே.கணேஷ் தெரி வித்தார்.

வவுனியா மாவட்டத்தில் இடம் பெயர்ந்த 10ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென 11 மில்லியன் ரூபா நிதி தேவைப் படுகின்றது.

இவர்களுக்கு நிவாரணம் வழங் கும் பொருட்டு நிதி வழங்குமாறு புனர்வாழ்வு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக கே.கணேஷ் மேலும் தெரிவித்தார். (ந-8)

## குண்டு வெடிப்புச் சம்பவம்குறித்த

# தகவல்களைத் தருவோருக்கு 20 இலட்சம் ரூபா சன்மானம்

கொழும்பில் பிரபல ஹிந்தித் திரைப்பட நடிகர் ஷாருக்கான் கலந்துகொண்ட இசை நிகழ்ச்சி யின் போது இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக சந்தேக நபர்களைக் கைதுசெய்யவதற்கு வேண்டிய தகவல்களை வழங்கு வோருக்கு 20 இலட்சம் ரூபா சன் மானம் வழங்கப்படுமென பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோ இது தொடர்பாக தகவல் தெரிவிக்கையில்,

இச் சம்பவம் தொடர்பான புலன் விசாரணைகள் சரியான வழி நடத் தல்களுடன் நடைபெறுவதாகக் கூறினார்.

விசாரணைகளைத் துரிதப்படுத் தப்படுவதற்காகவே சன்மானம் வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

### ஆன்மீகச் சொற்பொழிவு

இந்துசமய விவகார அலுவல் கள் திணைக்களத்தின் யாழ்மாவட்ட அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழ மைகளில் நாவலர் மணிமண்டபத தில் நடாத்திவரும் ஆன்மீகச்சொற் பொழிவுவில் நாளை பி.ப6.00 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி ஆசிரியர்களான ச.லலீசன் 'சித்தம் அழகியார்' எனும் விடயம் பற்றி சிறப்புச்சொற்பொழிவாற் றவுள்ள துடன் வி.செவ்வந்திநாதக் குருக் கள் திருவாசகப பண்ணிசை வழங் கவுள்ளார். (ற)

# செய்தித் துளிகள்

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறியினை மேற்கொண்டு கடந்த யூன் மாதம் 20ஆம் திகதி எம்.ஐ.எஸ்.பாடத் திற்கு தோற்றிய மூன்றாம் வருட மாணவர்கள் எதிர்வரும் ஜனவரி 02ஆம் திகதி நடைபெறவுள்ள எம்.ஐ.எஸ்.பரீட்சைக்குத் தோற்ற முடியும் என உயர் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் ரி.இராஜரட் ணம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு தோற்ற விரும்புவர் கள உடனடியாக உயர் தொழில்நுட்ப நிறுவனத்துடன் தொடர்புகொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

## வீதிகள் சேதம்

(கல்வியங்காடு)

யாழ்.நகரப்பகுதியின் பிரதான வீதிகள் பல கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றன.

குறிப்பாக பலாலி, பருத்தித துறை போன்ற வீதிகள் புனரமைக்க வேண்டிய நிலையிலுள்ள போதி லும் உரியவர்கள் இவ்விடயத் தில் அக்கறை கொள்ளாதிருக் கின்றனர்.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை அனு பவிக்கின்றனர். (ப-74)

## ஒளிவிழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு தென்னிந்திய சபை யின் ஒளிவிழா எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00மணிக்கு புங்குடுதீவு தென் னிந்திய திருச்சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

* * *

புங்குடுதீவு புனித சவேரியார் தேவாலயத்தில் பங்குத்தந்தை இமனுவேல் தலைமையில் எதிர் வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00மணிக்கு ஒளிவிழா நடைபெறவுள்ளது. (க-126)

## இறுவட்டுக்கள் மீட்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாகத் தயாரிக்கப் பட்ட ஒருதொகை இறுவட்டுக் களை கொழும்பு கோட்டைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

இந்த இறுவட்டுக்களை விற் பனைசெய்த நபரையும் பொலி ஸார் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

கொழும்பு யூனியன் பிளேஸ் பகுதியில் நடைபாதையில விற் பனைக்கு வைக்கப்பட்டிருந்தபோதே இந்த இறுவட்டுக்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் ஆயிரம் இறுவட்டுக்கள் அங்கு கைபபற்றப்பட்டதாக பொலி ஸார் தெரிவித்தனர். பல்வேறு விடயங்கள் சட்டவிரோதமாகப் பதிவுசெய்யப்பட்டு விற்பனை செய யப்பட்டமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (ந-8)

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கிழக்குமாகாணத்தில் வெள் ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு உதவும் பொருட்டு ஆரம் பிக்கபபட்டுள்ள "கிழக்கின் வெள்ள அனர்த்தத்திற்கு வடக்கு உறவு களின் உதவிப் பயணம்" என்ற திட்டத்திற்கு அனைத்து சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் நிர்வாகிகள் ஆகியோரை உலர் உணவு சேகரிப்பு நடவடிக்கைகளில ஈடுபடுமாறு ஒருங்கிணைப்புக்குழு கேட்டுள்ளது.

ஆலயங்கள், தேவாலயங்கள், விளையாட்டுக் கழகங்கள், அரச தனியார் நிறுவனங்கள் என்பன தமது சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள் ளது. (ச)

# சர்வதேச கால்பந்து அமைப்பு விருது பிரேஸிலின் ரொனால்டினோவுக்கு

சர்வதேச கால்பந்துக் கூட்ட மைப்பின் (FIFA) இந்த ஆண் டிற்கான சிறந்த உதைபந்தாட்ட வீரர் விருதை பிரேஸில் உதை பந்தாட்ட வீரர் ரொனால்டினோ பெறறிருக்கிறார்.

பிரேஸில் அணியில், ரொனால் டோ, ரிவால்டோ, ரொனால்டினோ ஆகிய வீரர்கள் மிகவும் பிரபல



மானவர்கள். இவர்கள் மூவரும் ஒன்று சேர்ந்துவிட்டால் அணிக்கு வெற்றி மிகச் சாதாரணம். இக் கூற்று 2002ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் நிருபிக்கப் பட்டது.

அப்போதைய உதைபந்தாட்ட நட்சத்திரமான பேலேய்ய மிகவும் கவர்நதவர் ரொனால்டினோ. இவர் நட்சத்திர வீரராக முன்னேறுவார் என அப்போதே கூறினார் போலே.

கோல் அடிப்பதில் வல்லவரான ரொனால்டினோ, பிரேஸில் அணி ஐந்தாவது முறையாகவும் உலகக் கிண்ணத்தை வெல்லக் கைகொடுத் தார்.

2006ஆம் ஆண்டு நடைபெற வுள்ள உலகக்கிண்ணப் போட்டிக் கான தகுதிகாண் போட்டியில் பிரேஸில் வெற்றிபெறவும் இவர் முக்கிய பங்குவகித்தார். தவிர இவரால், இவர் அங்கம் வகிக்கும் பார்சிலோனா கிளப்பும் முன்னேற் றம் கண்டது. இந்த அணி தற்போது நடைபெறும் ஸ்பரிஷ் லீக் போட்டி யில் முன்னிலையில் உள்ளது.

இவ்வாறு எல்லா வகையிலும் திறமையுள்ள வீரருக்கு சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு சரியான அங்கீகாரத்தை தற்போது அளித் திருக்கிறது.

சாவதேச பயிற்சியாளர்கள் 154 பேர், மற்றும் 154 அணித்தலை வர்கள் அளித்த வாக்கு அடிப் படையில், 24 வயதான ரொனால் டினோ 620 புள்ளிகளைப் பெற்று முதலடத்தைப் பெற்றார். 552 புள் ளிகளுடன் ஹென்றி இரண்டாம் இடத்தையும் ஐரோப்பாவில் சிறந்த வீரர் விருது வென்ற ஆந்ரே ஷெவ் சென்கோ 253 புள்ளிகளுடன் மூன றாம் இடத்தையும் பெற்றனர்.

சுவிற்சர்லாந்து தலைநகர் சூரிச் சில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் FIFA தலைவர் செப் பிளாட்டர் இவ்விருதை ரொனால் டினோவுக்கு வழங்கினார்.

விருதைபபெற்ற ரொனால்டினோ கருத்துத் தெரிவிக்கையில் விரு துக்காகத் தான் தெரிவுசெய்யப்பட டதை பெரிய கௌரவமாகக் கருது வதாகவும், தனது பாரசிலோனா அணிக்காகவே தொடர்ந்தும் விளை யாடப் போவதாகவும் கூறினார்.

அதேவேளை, இந்த ஆண்டின் சிறந்த கால்பந்து வீராங்கனையாக ஜெர்மனியின் பெர்ஜிட் பிரின்ஸ தெரிவு செய்யப்பட்டார். சிறந்த உதைபந்தாட்ட அணியாக பிரேஸில் அணி தெரிவுசெய்யப்பட்டது.(7)

# இன்சமாமிற்குப் பதிலாக புதியவரை நியமிக்கவேண்டும்

## பாகிஸ்தான் விளையாட்டு அமைச்சர்

பாகிஸ்தான் கிரிக்கெற் அணித் தலைவர் பதவிக்கு, இன்சமாம் உல்ஹக்கிற்கு பதிலாக புதிய ஒரு வர் நியமிக்கப்பட்டாலே அணிக்கு புத்துயிரளிக்க முடியுமென பாகிஸ் தான் விளையாட்டுத்துறை அமைச் சர் முகமது அஜ்மல்காஸ் கூறி யிருக்கிறார்.

அண்மையில் பேர்த் டெஸ்டில் அவுஸ்திரேலிய அணியிடம் 491 ஓட்டங்களால் படுதோல்வி அடைந் தது பாகிஸ்தான் அணி. அதன் மிக மோசமான தோல்வியும் இதுவே.

இன்சமாமை ஒரு மந்தமான தலைவர் எனக் கூறியிருக்கும் அமைச்சர், சகவீரர்களை சரியாக ஊக்குவித்து அணியை வெற்றிக்கு இட்டுச்செல்ல அவருக்கு தெரிய வில்லை என்றும் கூறியுள்ளார்.

அத்துடன் பாகிஸ்தான் பயிற் சியாளர் பொப் உல்மர் பாகிஸ் தான் அணி வீரர்கள் அதிகமாக மனக்குழப்பமடைந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்.

இதேவேளை, பாகிஸ்தான் கிரிக் கெற் சபைத் தலைவர் ஷகரிலா கான் ஒரு தோல்வியைவைத்து அணியில் மாற்றங்களைச் செய்ய முடியாது எனவும் இன்சமாம் இது வரை சிறந்த தலைவராகவே செயற்பட்டிருக்கிறார் என்றும் கூறி யிருக்கிறார். (7)

# விளையாட்டு செய்திகள்

# நான் அடித்த சதத்திற்கு டெண்டுல்கரே காரணம்

பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர் முகமட் அஸ்ரபுல் தான் அடித்த



சதத்திற்கு சச்சின் டெண்டுல்கரே காரணமெனக் கூறியிருக்கிறார்.

சிட்டகொங்கில் நடைபெற்ற போட் டியில், 20 வயதான அஸ்ரபுல் ஆட்ட மிழக்காது 158 ஓட்டங்களை எடுத்தார். டெஸ்ட் கிரிக்கெற் வரலாற்றில் பங்களாதேஷ் வீரர் ஒருவர் பெறும் அதிக ஓட்டமாக இது அமைந்தது.

இந்தியப் பந்துவீச்சாளர்களை துணிச்சலுடன் எதிர்கொண்டு சிக் ஸா பவுண்டரி என்று விளாசி சத மடித்தார் ஹீரோ அஸ்ரபுல்.

இந்தச சதம் தனது வாழ்க்கை யில் திருப்புமுனை எனக் கூறும் அஷ்ரபுல், அதற்குக் காரணம் சச் சின் என நன்றியுடன் கூறுகிறார். போட்டியில் ஆடமுன் சச்சினுடன் பேசக்கிடைத்த கொஞ்ச நேரத்தில் துடுப்பாட்ட நுணுக்கங்களைக் கேட்டபோது சிறிதும தயங்காது நிறைய ஆலோசனைகளை வழங் கினார். அத்துடன் அவர் வழங் கிய முக்கியமான ஆலோசனை 'உனது திறமையில் நம்பிக்கை வைத்து தாழ்வு மனப்பான்மை யின்றி விளையாடு தாழ்வு மனப் பான்மையின்றி விளையாடினால் போதும் நிச்சயமாக முன்னேற முடி யும்' என்றார்.

2001ஆம் ஆண்டு, தனது 16 ஆவது வயதில் முதல் போட்டி யிலேயே இலங்கைக்கு எதிராக சதமடித்த அஷ்ரபுல், இப்போது தான் தனது இரண்டாவது சதத்தை அடித்துள்ளார். இலங்கை அணி யில் இரு பந்து வீச்சாளர்களே அச் சுறுத்தலானவர்கள். ஆனால் இந் திய அணியில் நான்கு சிறந்த



பந்துவீச்சாளர்களைச் சமாளித்து சதமடித்தது பெரிய விஷயமென் கிறார் அஸ்ரபுல்.

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக நடுத்தரக் குடும்பத் தில் பிறநத அஸ்ரபுல்லின் டாக்கா பஷாபோ பகுதியிலுள்ள வீடும் வெள்ளத்தால் மூழ்கியமை குறிப் பிடத்தக்கது. (7)

பெரு நாட்டில் பரிதாபம்

# பயணிகள் பேருந்து ஆற்றினுள் கவிழ்ந்தது

## 54பேர் நீரில்மூழ்கிப் பலி; 15பேர் படுகாயம்

**தென்னமெரிக்க நாடான பெருவில் பயணிகள் பேருந்து ஒன்று ஆற்றினுள் கவிழ்ந்ததில் 54 பேர் ஆற்றுநீரினுள் மூழ்கிப் பலியானதுடன் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**

பெருநாட்டின் தலைநகரான விமாவிற்கு வடகிழக்கே 350 கிலோமீற்றர் தூரத்திலுள்ள வனப்பகுதிப் பாதையில இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விமாவிலிருந்து புறப்பட்டு உல்லாசப் பயணிகளுடன் மேற்படி ஆற்றினது பாலத்தின் மேலாகப் பயணிகள் பேருந்து சென்றுகொண்டிருந்தபோது திடீரெனப் பலத்த காற்று இடி மின்னலுடன் மழைபெய்ததால் பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழநது பாலத்திலிருந்து விலகி ஆற்றினுள் கவிழ்ந்தது.

சம்பவநேரம் ஆற்றினில் நீர்மட்டம அதிகமாகக் காணபபட்டதால் உல்லாசப் பயணிகள் நீரினுள்மூழகி உயிரிழந்ததுடன் 15 பேர் காயமடைந்தனர். அத்துடன் பலர் ஆற்றினால் அடித்துச் செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடாந்து அங்கு வந்த மீட்புப் பணியாளர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன் போது 54பேரது சடலங்கள் மீடகப் பட்டன.

மேற்படி ஆற்றுப் பாலத்தினது சிறகுகள் உறுதியாக இருக்காததினாலேயே பேருநது ஆற்றினுள் பாய நேரிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொடூரச் சம்பவத்தைப் பெருநாட்டின் அதிகாரிகள் நேரில் சென்று பாாத்ததுடன் பாதிக்கப்பட்டவாகளுக்கு அனுதாபங்களையும் தெரிவித்தனர்.(ப)

## குளிர்காற்றால் 12பேர் பலி

(லக்னோ)

உத்தரப்பிரதேச மாநிலத்தில் நான்காவது நாளாக நேற்றுமுன்தினம் தொடர்ந்து கடுங் குளிர்காற்று வீசியது. மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் குளிர்காற்று வீசுகிறது. கடந்த 24 மணி நேரத்தில் மேலும் ஆறுபேர் குளிர்காற்றில் சிக்கி இறந்தனர்.

இதனையடுத்து குளிர்காற்றில் சிக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆக உயாநதுளளது. வரும் ஜனவரி 15ஆம் திகதி வரை குளிர்காற்று வீசுவது தொட... என்று வானிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

லக்னோ மாவட்டத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு ஜனவரி 16ஆம் திகதிவரை விடுமுறை விடப்பட்டுள்ளது. கடுங் குளிர்காற்றுத் தொடர்ந்து வசுவதால் ரயில் சாலை மற்றும் விமானப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கோரகபூா, பக்ராய்ச் ஆகிய பகுதிகளில் குறைந்தபட்சமாக 12 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. (ப)



இந்தியா வந்துள்ள மலேசியப் பிரதமர் பதாவி, அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாவை டில்லியில் சந்தித்துப் பேசினார்.

## பலங்கானா நதியினுள் பயணிகள் பஸ் கவிழ்ந்தது

### 30பேர் பலி; 15பேர் காயம்

(உத்தராஞ்சல்)

உத்தராஞ்சல் மாநிலம தேரி மாவட்டத்தில் குட்டு எனுமிடத்தில் பலஙகானா நதி ஓடுகிறது.

கன்சாலி நகரை நோக்கி 40 பயணிகளுடன் ஒரு பஸ் நேற்றுமுன்தினம மாலை செனறுகொணடிருநதது. திடீரென கட்டுபபாட்டை இழந்த பஸ் பலங்கானா நதியில் கவிழ்ந்தது.

இநத விபததில் பஸ் சுக்குநூறாக உடைந்து நதியில் மூழ்கியது.

பஸ்சில் பயணம் செயத 30 பயணிகள் மூழ்கி இறந்தனர். 15 பயணிகள் படுகாயமடைந்தனர். அதில் ஐந்துபேரின நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. நதியில் மூழ்கி இறந்த 25 பயணிகளின் உடல்களும் மீட்கப்பட்டன. உத்தராஞ்சல் முதல்வர் என.டி.திவாரி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். (ப)

# ஈராக்கிலுள்ள அமெரிக்க தளம் மீது தீவிரவாதிகள் பயங்கர தாக்குதல்

### 22பேர் பலி; 50பேர் படுகாயம்

(மொசூல்)

ஈராக்கில் மொசூல நகரில அமெரிக்க இராணுவத்தளத்தில் நடந்த ஏவுகணை மற்றும் பீரங்கித் தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டனா். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஈராக்கின் வடக்குப் பகுதியில் உள்ள மொசூல் நகரில் அமெரிக்க இராணுவத்தின் மிகப்பெரிய தளம் உள்ளது. நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இங்கு குண்டுவெடிக்கும் சத்தம் கேட்டது. ஏவுகணை மற்றும் பீரங்கிகளால் அடுத்தடுத்துத் தாக்குதல் நடந்தது. இதில 22 பேர் பலியாயினா். 50க்கும மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலை பென்டகன் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். எனினும் இறந்தவர்கள் குறித்த விபரஙகளை அவர்கள் தெரிவிக்கவில்லை. இந்தத் தாக்குதலின் பின்னணி குறித்து உடனடியாகத் தகவல் எதுவும் தெரியவில்லை. இதுகுறித்து மொசூல் நகரில் உள்ள அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில்,

அமெரிக்க இராணுவத்தளம் மீது அவ்வப்போது தாக்குதல்கள் நடைபெறும. ஆனால் இதுவரை குறிபார்த்து எந்தத் தாக்குதலும் நடககவில்லை. முதனமுறையாக இதுபோன்ற தாககுதல் நடந்துளளது. தாக்குதல் நடைபெற்றபோது சாபபாட்டுவேளை. எனவே சாப்பிடும் அறையைக் குறிபார்த்து இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்றார்.

ஈராக்கில் சதாம் ஆட்சி ஒழிக்கப்பட்டுவிட்டாலும் அவரது ஆதரவுத் தீவிரவாதிகள் தொடர்ந்து அட்டூழியம் செய்து வருகின்றனர். அல்-கெய்டா மற்றும் அல்-முசாப் சர்காவியின் இயக்கத்தினர் தொடர்ந்து அமெரிக்கப்படைகள் மீது தாககுதல் நடத்திவருகின்றனர். பலுஜா நகரை அமெரிக்க இராணுவம் முழுமையாகத் தங்களது கட்டுப்பாட்டில் கொணடுவந்துவிட்டதால் அங்கிருந்த தீவிரவாதிகள் மொசூல் நகருக்கு இடம் பெயாந்துவிட்டனா். இதனால் இந்தத் தாக்குதலின் பின்னணியில் அல்-சர்காவில் தீவிரவாதிகளுக்குத் தொடாபிருககலாம எனறு கருதபபடுகிறது. (ப)

## பாக்.எல்லையில் ஓசாமா பின்லேடன்



பாகிஸதான-ஆபகானிஸ தான் எல்லையில ஓசாமாபின லேடன பதுங்கியருக்கலாம் என்று நம்புகிறேன் என அமெரிக்க அதிபா புஷ் தெரிவித துள்ளார்.

புஷ் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது அல்-கெய்டா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஓசாமா பின்லேடன் குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அதிபர் ஜோர்ஜ புஷ், எனது யுகம சரியாக இருக்குமேயானால், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான மலைப் பகுதிகளில்தான் ஓசாமா பின்லேடன் மறைந்திருக்கக்கூடும்.

அல்-கெய்டா மிகவும் ஆபத்தான தீவிரவாத அமைப்பு. அதில் சந்தேகமே தேவையில்லை எனவே எங்களின் தேடுதல் வேட்டை தொடரும் என்றார். (ப)





## நஜாப்பில் குண்டுத்தாக்குதல்

### 54பேர் பலி; 150பேர் காயம்

ஈராக்கின் ஷியா முஸ்லிம்களின் புனிதத் தலமாகக் கருதப்படும் கர்பாலா அருகில் உள்ள நஜாப் நகரில் நடந்த வெடிகுண்டுத் தாக்குதலில் 54 பேர் கொல்லப்பட்டனர்.

ஷியா முஸ்லிம்களின் பெருந்தலைவராக அயோதுல்லா அலி அல் சிஸ்டானியைக் குறிவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இத்தாக்குதலின் பின்னணியில் பீ சன்னிமுஸ்லிம் தவிரவாதிகள் இருந்துள்ளார்கள் என்றும கூறப்படுகிறது.

ஈராக்கில் புதிய ஆட்சி ஏற்பட ஜனவரி நடத்தப்படவுள்ள தேர்தலில் வாக்களிக்குமாறு ஷியா முஸ்லிம்களை அயோதுல்லா அலி அல் சிஸ்டானி கேட்டுக்கொண்டதையடுத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இத தாக்குதலில் 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இத்தாககுதல் தொடர்பாக இதுவரை 50க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ப)



மதுரை கூடலழகர் கோயிலில் நேற்று சொர்க்கவாசல் திறப்பதையொட்டி கோயில் முழுவதும் சுமார் ஒரு இலட்ச ரூபாய் செலவில் மலரலங்காரம் செய்யப்பட்டுள்ளது.



அமெரிக்காவில் இந்தியாவைச் சேர்ந்த பெண்ணுக்கு உலகிலேயே மிகச்சிறிய குழந்தை பிறந்துள்ளது. இதன் நிறை 243.80 கிராம், உயரம் 9 அங்குலம் மட்டுமே.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு - குறள்

வலம்புரி

## அமெரிக்காவின் ஊடுருவல் சமாதானத்தை பாதிக்கும்

இனப்பிரச்சினைக்கான தீர்வைக்காண்பதில் ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணி அரசு அக்கறை கொள்ளாமல் இருப்பதற்கு பல காரணங்கள் உண்டு.

அதில் சர்வதேச நாடுகளின் இரட்டை வேடமும் ஒன்று என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும். அதாவது இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் மூலம் ஆயுத விற்பனையால் அதிகலாபம் பெற்ற சில நாடுகள் மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்துவதன் மூலம் தமது லாபத்தை உறுதிப்படுத்தி கொள்ள முற்பட்டுள்ளன.

இதற்காக அந்த நாடுகள் இலங்கை அரசுக்கு ஆயுதப்பயிற்சி மற்றும் இராணுவக்கட்டமைப்பு போனற விடயங்களில் வலிந்து ஆலோசனை வழங்குவதை காணமுடிகின்றது.

குறிப்பாக இது விடயத்தில் அமெரிக்காவின் உள் நுழைவு வலிந்து வரும்போக்கு மிகவும் அதிகம் என்றே கூறவேண்டும்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமெரிக்க குழுவொன்றில் இராணுவ அதிகாரி ஒருவரும் இடம் பெற்றுள்ளமை அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

சமாதான சூழ்நிலை கவலைக்கிடமாக இருக்கும்வேளையில் அமெரிக்க இராணுவ அதிகாரி உள்ளிட்ட குழு யாழ்ப்பாணத்திற்கு எதற்காகவருகை தந்தது.

அந்தக்குழுவை இங்கு வரவழைத்தது யார்? உயர்பாதுகாப்பு வலயம், முகமாலை இராணுவ முகாம் ஆகிய இடங்களை உன்னிப்பாக கவனித்தமை எந்நோக்கில் என்ற பல்வேறு கேள்விகள் தமிழ்மக்கள் மத்தியில் இப்போது ஏற்பட்டுள்ளது.

இருபது வருடகாலமாக இடம்பெற்ற யுத்தம் முடிவுக்கு வந்ததோ, இல்லையோ, ஆனால் உலக வல்லாதிக்கத்தில் முதன்மை வகிக்கும் நாடுகள் இலங்கையில் நிலவும் அசாதாரண சூழ்நிலையை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு ஊடுருவியுள்ளன.

இதற்கு இலங்கை அரசுகளும் காரணம் என்பதை மறுத்துவிடமுடியாது. அதாவது விடுதலைப் புலிகளின் ஆயுத- ஆட்பலத்திற்கு ஈடுகொடுக்க முடியாத அரசுகள் தமக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை தடுப்பதற்காக மறைமுகமாக வெளிநாடுகளிடம் உதவிக்கரம் நீட்டின.

குறிப்பாக அமெரிக்கா, இந்தியா ,பாகிஸ்தான் இஸ்ரேல் போன்ற நாடுகளிடம் ஆயுதஉதவி யையும் இராணுவப் பயிற்சியையும் பெற்றுக் கொண்டன.

அதேவேளை இனப்பிரச்சினை விடயத்தில் விடுதலைப்புலிகளை அச்சுறுத்த வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக அமெரிக்காவின் உதவியை ஐக்கிய தேசிய முன்னணி அரசு நாடியிருந்தது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசில் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சராக இருந்த மிலிந்த மொறக்கொட அமெரிக்காவை இலங்கைக்கு அழைத்து வருவதில் பெரும் பணியாற்றினார். இதற்காக அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்காவை அமெரிக்காவிற்கு கூட்டிச் சென்று அந்நாட்டு ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் உடன் இரு தடைவைகள் சந்திப்பை ஏற்படுத்தியிருந்தார்.

அரசும்-விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்து கொண்டு சமாதானப் பேச்சுக்கள் ஒருபுறம் நடந்துகொண்டிருந்த வேளை,மறுபுறத்தில் அமெரிக்காவின் உதவி பெறுவதில் ரணில் விக்கிரமசிங்காவும்,மிலிந்த மொறகொடவும் தீவிரமாகவும் ஈடுபட்டிருந்தனர்.

சமாதானத்தில் நம்பிக்கைகொண்டு ,யுத்தநிறுத் உடன்படிக்கையில் தலைவர் வே.பிரபாகரன் கைச்சாத்திட்டிருந்த போதிலும் கூட, சிங்கள ஆட்சியாளர்களின் கபடப்புத்தி வேலைசெய்துகொண்டே இருந்தது. சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது தம்மால் வழங்கப்படக் கூடிய தீர்வை விடுதலைப்புலிகள் ஏற்கமறுத்தால் , அமெரிக்காவின ஊடாக விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுத்து தமது தீர்வுத்திட்டத்தை திணிப்பதே ஐக்கிய தேசியமுன்னணியின் அரசின் நோக்கமாக இருந்தது.

அதனை ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசும் விடுவதாக இல்லை எனினும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் ,ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கும் இடையேயான வித்தியாசம் ஒன்று இருக்கவே செய்கின்றது.

அது எதுவெனில் ஐக்கியதேசிய முன்னணி அரசு சமாதானப் பேச்சுவார்த்தையின் ஊடாக அமெரிக்க உதவியைப்பெற முற்பட்டது.

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசோ,யுத்தம் ஒன்றை மீண்டும் ஒரு முறை நடாத்துவதற்காக அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளது. ஆக, ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்களின்இலட்சியத்துக்கு குந்தகம்விளைக்கும் வகையிலேயே அமெரிக்காவின் இலங்கை ஊடுருவல் அமைந்துள்ளது. உண்மையில் அதன் விளைவு சமாதான சூழ்நிலையை பாதிப்பதாகவே இருக்கும்.

### இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சுவார்த்தையே சிறந்த வழி

# சமாதான ஏற்பாட்டாளர் பணியில் ஏற்படும் இடர்களை எவ்வகையிலும் எந்நேரத்திலும் சமாளிக்கத் தயார்

### நோர்வே பிரதமர் தெரிவிப்பு

(நோர்வே)

இலங்கையில் தற்போது நிலவி வரும் அமைதிச் சூழ்நிலை குழம்பி மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுமாயின் மக்களும், நாடும் பாரிய அழிவினைச் சந்திக்க நேரிடும்.

இந்நிலையினை மனதில் இருத்தி தேக்க நிலையில் உளள சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நோர்வே பிரதமர் மாண்டேவிக் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற அரசியல் கட்சிகளுடனான ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமாயின்,கடந்த மூன்று ஆண்டுகளாக விடுதலைப்புலிகளாலும், அரசாங்கத்தாலும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்க வேண்டும் அப்பொழுது தான் சமாதானப் பேச்சு மேசையில் இரு தரப்பும் நிம்மதியாகப் பேச்சுவார்த்தை நடாத்த முடியும்.

இரு தசாப்த காலமாக இடம்பெற்று வந்த கொடிய யுத்தத்தின் மூலம் இலங்கை மக்கள் குறிப்பாக வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ்மக்கள் வாய்விட்டுச் சொல்ல முடியாத அளவு பாரிய இழப்புக்களை சந்தித்துள்ளனர்.

பெரியவர்கள்,சிறுவர்கள் என்ற வேறுபாடு இன்றி அவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வெறுத்துப் போயுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டாவது இரு தரப்பினரும் மாறி மாறி எதிரான கருத்துக்களைத் தெரிவிக்காமல், பேச்சுமேசைக்கு உடனடியாகத் திரும்பவேண்டும்.

இதற்கு நோர்வே தனது சமாதான ஏற்பாட்டாளர் பணியைத் தொடர்ந்தும் மேற்கொள்ளத் தயாராகவுள்ளது.

அதனை நாம் எந்நேரத்திலும், எந்தவிதத்திலும் வழங்கத் தயார்.

இதற்கு எந்தத்தடை வந்தாலும் அதனை நாம் சுமுகமாக எதிர்கொள்வோம். இதனைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளும் அரசும் உடனடியாகப் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்து நாட்டின் சுமுகமான தீர்வுக்கு வழிவகுக்க வேண்டும எனச் சுட்டிக்காட்டினார். (ந-4)

# டோக்கியோ இணைத்தலைமை நாடுகளின் செயற்பாடுகள் நாட்டில் மீண்டுமோர் போரையே ஏற்படுத்தக் கூடியன



### விமல் வீரவன்ச சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலானதும் சகல பிரஜைகளுமம ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான தீர்வொன்று வடக்கு-கிழக்கு பிரச்சினை சம்பந்தமாகக் காணப்பட வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத் தலைவரும் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இயக்கத்தின் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாட்டுச் சக்திகளின் தேவைகளுக்கமைய இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.

வடக்கு-கிழக்கில் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வினை ஏற்படுத்தித் தருகின்றோம் என்று நோர்வே, அமெரிக்கா போன்ற டோக்கியோ இணைத்தலைமை நாடுகள் சிங்களப் பேரினவாத மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பூச்சாண்டி காட்டி வருகின்றன.

இதனை எதிர்த்து நாம் குரல் கொடுத்த போது சமாதானப பேச்சுவார்த்தையை ஜே.வி.பி. குழப்பி வருகின்றது என அந நாடுகள் தெரிவிக்கின்றன இது என்ன நியாயமாகும்?

சாவதேசத்தின் இவ்வாறான நடவடிக்கைகள் இலங்கைக்குள் மீண்டும் ஒரு போரை ஏற்படுத்தி விடும். அதற்கெதிராகவே நாங்கள் குரல் கொடுக்கின்றோம்.

நாட்டின் இன்றைய அரசியல் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு எமது இயக்கம் செயற்படமாட்டாது, செயற்படவுமமுடியாது.ஆனால் எமது இயக்கம் நாட்டின் நன்மை கருதியும் நாட்டுமக்களின் தேவைகருதியும் சிறப்பாகச் செயற்படும்.

எஸ்.பி. திஸநாயக்கவை ஒரு அரசியல் கைதி என்ற வகையில் காண்பிப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சியும், சில ஊடகங்களும் முயற்சி மேற்கொண்டுள்ளன. இது எந்தவகையிலும் வெற்றியளிக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

# அரசாங்க சேவைகளில் அடுத்த ஆண்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த அரசு திட்டம்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் அடுத்த வருடத்தில் இருந்து பாரிய மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரச ஊழியர்களின் ஒத்துழைப்பினையும் பங்களிப்பினையும் பெற்றுக் கொள்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் என பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த உத்தேசத் திட்டத்திற்கு அமைய எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து இலிகிதர்கள், தட்டெழுததாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், காசாளர்கள் மற்றும் கணக்குப்பதியுநர் ஆகிய பதவிகள் நீக்கப்படவிருக்கின்றன.

இந்தத் தேவைகளுக்குப் பதிலாக முகாமைத்துவ உதவியாளர்கள் என்ற பெயரில் சேவைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜயம்பதி கெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

முகாமைத்துவ உதவியாளர்கள் என்ற பதவிக்கு அரச சேவையில் உள்ள 43 ஆயிரம் ஊழியர்கள் உள்ளீர்க்கப் படவுள்ளனர்.

சம்பள அதிகரிப்பு உட்பட மேலும் பல அனுகூலங்கள் அவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன. எதிர்காலத்தில் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் சேர்ந்து கொள்வதற்கு ஒருவர் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பது அவசியமாகும். அரச சேவையில் சகல நிர்வாக நடவடிக்கைகளும் கணனி மயப்படுத்தப்படவிருக்கின்றன. அத்துடன், அரச ஊழியர்களுக்கு கணனிப் பயிற்சியளிக்கும் திட்டமும் மேற்கொள்ளப்படவுள்ளது.

அரச ஊழியர்களுக்கான பதவி உயர்வுகள் வழங்கல் சம்பந்தமான தற்போதைய வழிமுறைகள் முற்றிலும் மாற்றியமைக்கப்படவிருக்கின்றன.

இதேவேளை, இந்தத் திட்டத்தினை சகல தொழிற்சங்கங்களும் ஆதரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

### தீவகங்களிலிருந்தும்

# கிழக்கு மக்களுக்கு நிவாரண பொருட்கள் சேகரிப்பு


(புங்குடுதீவு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு உதவ புங்குடுதீவு மக்களும் முன்வந்துள்ளனர்.

புங்குடுதீவில் உள்ள தேசிய எழுச்சிப்பேரவை, பொது அமைப்புக்கள், அரசியல் துறையினர் ஆகியோர் இணைந்து பொருட்களைச் சேகரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

பல்வேறு பிரச்சினைகள் மத்தியில் வாழும் தீவக மக்கள் தமது உறவுகளுக்காக தாராள மனப்பான்மையுடன உணவுப் பொருட்களையும் உடுபுடவைகளையும் வழங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-126)

### சாயி அருளமுதம்



தெய்வம் அவதாரமாகத் தோன்றும் பொழுது கூட மனிதன் திரையைக் கிழித்துத் தெய்வத்தைக் கனம் பண்ண முடியாதிருக்கிறான். மக்கள் தன்னைச் சாதாரண மனிதனாகக் கருதுவதனால் தாமாக விளங்கும் தெய்வத்தை மக்கள் இனம் கண்டு கொள்ள முடியாதிருப்பதாக கிருஷ்ணபரமாத்மா கூறுகிறார். உள்ளேயிருக்கும் ஓட்டமான ஆத்மாவை அறிந்திருப்பவர்களால் மட்டுமே தமக்கு முன்னாலிருக்கும் மூலசக்தியை இனங்காண முடியும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளின் யாழ் வருகைக்கு பொது அமைப்புக்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்கப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு விஜயம்செய்து இங்குள்ள பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்ந்துள்ளமையை இட்டு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சில அமைப்புக்கள் வன்மையாகக் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்ட போருக்கு முடிவுகட்டி நல்லெண்ண சூழ்நிலையில் மக்களின் இயல்புவாழ்வு நிலையில் இனநெருக்கடியான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே யுத்தநிறுத்தமும், புரிந்துணர்வு ஒப்பந்தமும் இலங்கையரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டதென யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க அனைத்துக் காவலரண்களும் மக்கள் குடியிருப்பிலுள்ள இராணுவ அத்துமீறல்களும் படிப்படியாக அகற்றப்படவேண்டும் என்பதேயாகும். ஆனால் எதிர்வுகூறப்பட்டபடி எதுவும் நடைபெறவில்லை. இது விடயமாகப் பாதிக்கப்பட்ட மக்களும், மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற பொது அமைப்புக்களும் பல போராட்டங்களை நடாத்தியிருக்கின்ற இந்தவேளையில் யுத்தத்திற்கான முஸ்தீப்பு வேலைத்திட்டங்கள் இலங்கை அரசின் அனுசரணையுடன் அமெரிக்க அரசாங்கத்தின் இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் எமது தாயகப் பிரதேசத்தில் உள்ள இராணுவ முகாம்களையும், காவலரண்களையும் பார்வையிட்ட நடவடிக்கையானது போர்மேகம் கொண்ட செயற்பாடாகவே கருதுகின்றோம்.

போர்நிறுத்த ஒப்பந்தமும், சமாதான உடன்படிக்கையும் செத்துவிடுமோ என்ற அங்கலாய்ப்பில் எம்மக்களும், சர்வதேசமும் ஏங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் அமெரிக்க வல்லாதிக்க அரசின் இராணுவ ஆய்வாளர்களின் இரகசிய விஜயம், சமாதானத்தின் மீதான நம்பிக்கையை இழப்பதுடன், மீண்டும் ஓர் போர் ஏக்கம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம், மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ் பேசும் மக்களின் அமையம், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் என்பனவும் கண்டன அறிக்கையினை வெளியிட்டுள்ளன. (ச-04)

## தமிழ்...

ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளங்கோ பிரகாஸ், மற்றும் நவரத்தினம் கிருஷன் ஆட்டோ சாரதியான பண்டாரவளையைச் சேர்ந்த முருகன் யோகராஜன் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர். (ச)

## இடம்பெயர்ந்த மக்கள்...

களின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது. யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள பிரதேசங்களில் இருந்து கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் வெளியேறிய இவர்கள் இதுவரை காலமும் நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது சொந்த வீடுகளில் மீளக்குடியமர்வதற்குரிய நடவடிக்கைகளை பெற்றுத் தருமாறு அரசியற்துறைப் பொறுப்பாளரை கேட்டுள்ளனர்.

தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கும் தமது தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கும் தமது பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுத்தருமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த கோரிக்கை நிறைவேறாத பட்சத்தில் அரசுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்களை நடாத்தப்போவதாகவும் அவர்கள் தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்துள்ளனர். இச்சந்திப்பின் போது யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் கலந்து கொண்டார். (ச-08)

## விசேட...

ஆணைக்குழுத் தலைமை அதிகாரி றஞ்சித் அபயசூரிய அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

அடுத்தவருட ஆரம்பத்தில் வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆட்சேர்க்கும் பணி ஆரம்பமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இவர்களில் ஆயிரம் பேர் கான்ஸ்டபிள் தரத்திற்கும் 52 பேர் சப்கான்ஸ்டபிள் தரத்திற்கும் பயிற்றுவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

## ஜயந்த...

கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. அக்கலந்துரையாடலில் கண்காணிப்புக்குழுத் தலைவர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். அத்துடன் அரச அதிபரையும் சந்தித்து சமாதான நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடியுள்ளார். (ச-08)

## கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற முன்பள்ளியின் கலைவிழா இன்று பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு மாநகர சபையின் முன்னாள் ஆளுநர் சி.வி.கே.சிவஞானம் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ச-4)

## சமாதானத்தை...

நாளை கொடிகாமத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரியிலும் மனித சங்கிலிப் போராட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

'எமது நிலம் எமக்கு வேண்டும். எமது நிலத்தில் நாம் வாழ வேண்டும்.'

'எமது உயிர்போனாலும் உரிமையை இழக்கமாட்டோம்.'

'உடன்படிக்கையால் வாழ்ந்தவர் சிங்களவர், தாழ்ந்தவர் தமிழர்.'

'எமது தலைவர் பிரபாகரனே! அவர் வழி செல்வோம். அவர் கரத்தைப் பலமாக்குவோம்.'

'விடுதலைப் புலிகளுடன்பேசு! இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை வழங்கு!'

'சர்வதேசமே! நீ வழங்கும் டொலர்கள் எமது உயிரைக் குடிக்கும் எமன்களே.' (ச-19-5)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவி

(கொழும்பு)

யுத்தம் மற்றும் இடம்பெயர்வுகளால் பாதிப்புற்ற பெண்களுக்கு உதவும் வகையிலான வேலைத்திட்டம் ஒன்றினை நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சு விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

மேற்படி உதவி வழங்கும் வேலைத்திட்டத்தில் விதவைகள் மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்த குடும்பங்கள், திருமணமாகாத வயது சென்ற பெண்கள் ஆகியோர் முதன்மைப்படுத்தப்படவுள்ளனர்.

ஆலோசனை, வழிகாட்டல், சிறுகடன் உதவித்திட்டம், சுயதொழில் உதவிபோன்ற விடயங்கள் உள்ளடக்கியதாக இவ் வேலைத்திட்டம் அமையும்.(க-9)

## துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை,கோப்பாய் பகுதிகளில் 'நில அறுவடைக்கு வாரீர்' எனும் தலைப்பில் அமைந்த துண்டுப்பிரசுரம் அப்பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை தேசப்பற்றாளர் என்ற அடிக்குறிப்போடு போர் விழிப்புணர்ச்சியை தூண்டும் வகையில் இப் பிரசுரம் அமைந்துள்ளது. (ப-74)

## கொழும்பில்...

சென்றபோது அவர்கள் பொலிஸார் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர். பொலிஸாரும் பதிலுக்கு துப்பாக்கி பிரயோகம் செய்தபோதே இவர்கள் கொல்லப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களுடன் சென்ற இன்னொருவர் தப்பிச் சென்றுள்ளார். தப்பிச் சென்றவரை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ச-08)

## யாழில் பயிற்சிபெற்ற...

உமா (மாதகல்), ஜி.செல்வச்சந்திரன் (ஆனைக்கோட்டை), எஸ்.சிவகுமார் (ஆனைக்கோட்டை), என்.கோமதி (மானிப்பாய்), பி.ரதி (மானிப்பாய்), என்.சிவநாதன் (சுதுமலை),

வி.ரதீஸ் (இளவாலை), என்.சிவச்சந்திரன் (ஆனைக்கோட்டை), பி.சுமித்திரா (மானிப்பாய்), எஸ்.சிவாஜினி (இளவாலை), கே.கவிதா (யாழ்ப்பாணம்), ரீ.புதியராஜா (மானிப்பாய்), பி.ரூபன் (மானிப்பாய்), பி.கௌசலா (சண்டிலிப்பாய்), ஆர்.ஜெகதீஸ்வரன் (யாழ்ப்பாணம்), கே.கவிதா (பண்டத்தரிப்பு), வை.சுகந்தினி (மானிப்பாய்), ரீ.கீதாம்பரன் (யாழ்ப்பாணம்), ஆர்.தவகுமாரன் (சண்டிலிப்பாய்), ரீ.நீலாம்பரன் (யாழ்ப்பாணம்), எஸ்.ஜெயசீலன் (மானிப்பாய்), ரீ.மேகலா (யாழ்ப்பாணம்), எஸ்.நாகரட்ணம் (யாழ்ப்பாணம்), என்.செல்வானந்தராஜா (யாழ்ப்பாணம்), எம். அரியம்றொபேட் (பண்டத்தரிப்பு),

என்.சத்தியவேந்தன் (மானிப்பாய்), ஏ.தமிழினி (வடலி யடைப்பு), ஏ.மோகன்ராஜ் (வடலியடைப்பு), ஏ.தனராஜ் (வடலியடைப்பு), எஸ்.கஜன் (சண்டிலிப்பாய்), ஜி.தர்சினி (மானிப்பாய்), ஆர்.விஜயரட்ணம் (மானிப்பாய்), ஆர்.சுவர்ணலதா (பண்டத்தரிப்பு), ஜி.அன்ரன் டயஸ் (வத்தப்புலம்), கே.மணிவண்ணன் (மாதகல்), என்.சிவாங்கி (மானிப்பாய்), பி.சுதாஜினி (ஆனைக்கோட்டை), சி.சத்தியாப்பிள்ளை (மாதகல்), சி.இளங்கேஸ்வரன் (மானிப்பாய்), சி.கஜலவன் (வட்டுக்கோட்டை), எஸ்.காந்தன் (வட்டுக்கோட்டை), ரீ.பிரதீபன் (சங்கானை), ரீ.முருகதாஸன் (சித்தன்கேணி), எஸ்.சிவச்செல்வன் (சுழிபுரம்),

எஸ்.சிவாநந்தன் (சுழிபுரம்), எம்.ரமணன் (சுழிபுரம்), வி.யசோதா (சங்கானை), பி.ஜெயராணி (தெல்லிப்பழை), ரீ.சுரேஸ்குமார் (சங்கானை), பி.சுயாதா (சங்கரத்தை), எஸ்.பிரபாகரன் (சங்கானை), எம்.மாலதி (சித்தன்கேணி), எஸ்.சிவாநந்தன் (சுழிபுரம்), எஸ்.ஜெயசீலன் (மூளாய்), ஆர்.ரெஜிந்தன் (சித்தன்கேணி), என்.ஆதவன் (சுழிபுரம்), எஸ்.தவராணி (சுழிபுரம்), இ.சந்தனபவன் (சுழிபுரம்), வி. விஜயா (வட்டுக்கோட்டை), ஆர்.சாமலை (வட்டுக்கோட்டை), ரீ. விஜயகாந்தரூபன் (வட்டுக்கோட்டை), என்.நகுலாம்பிகை (தெல்லிப்பழை), ஏ.சபேசன் (வட்டுக்கோட்டை),

எஸ்.ஜெயக்குமார் (சுழிபுரம்), எஸ்.சசிகலா (யாழ்ப்பாணம்), எஸ்.விஜயகௌரி (பனிப்புலம்), என்.சுதேஸ்குமார் (சங்கானை), எஸ்.சிவகுமார் (யாழ்ப்பாணம்), என்.இன்பமலர் (தொல்புரம்), பி.ராஜேஸ்வரி (முரசுமோட்டை), வி.மோகன் (மூளாய்), ரீ. தேவசுதர்சினி (சங்கரத்தை), எம்.நந்தினி (சங்கரத்தை), என்.ரொசாந்தி (வட்டுக்கோட்டை), என்.பிரியதர்சினி (சுழிபுரம்), எஸ்.சேசவன் (சங்கரத்தை), எஸ்.ஜங்கரன் (சித்தன்கேணி), ஏ.கருணாநிதி (சித்தன்கேணி), என்.அனித்தாகாசினி (ஊர்காவற்றுறை), கே.சிவப்பிரியா (ஊர்காவற்றுறை), ரீ.பவன் (ஊர்காவற்றுறை), ஆர்.அந்தோனி (ஊர்காவற்றுறை),

எம்.சாந்தினிதேவி (காரைநகர்), வி.கிருஷ்ணவேணி (காரைநகர்), பி.அற்புதமலர் (காரைநகர்), ரீ.ஜெயரூபன் (காரைநகர்), ஜே.சிவமலர் (காரைநகர்), ய.குனேஸ்வரி (காரைநகர்), எம்.வாகீஸன் (காரைநகர்), எஸ்.தேவராஜ் (காரைநகர்), கே.தேவகுமாரன் (காரைநகர்), வி.சோமசுந்தரம் (காரைநகர்), எம்.சிவாஜினி (காரைநகர்), ஜே.சிவகுமார் (காரைநகர்), ரீ.புலேந்திரகுமார் (காரைநகர்), சி.இந்திரகுமார் (காரைநகர்).

**மேலதிக விபரங்களை வலம்புரிக் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும்.**

THE ROYAL COLLEGE OF JAFFNA
கட்டணம் 1000/= வுடன் மூன்று மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாக கதைக்கப் பயில
BY விக்னேஸ்வரன் ஆச்சாரி,
426 (302) K.K.S வீதி .யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை. (9127)

**சகல தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களுக்கும்**

**கிழக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்திற்கு வடக்கு உறவுகளின் உதவிப்பயணம்**

கிழக்கிலே ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிப்பொருட்களை வழங்குவதற்காக ஒவ்வொரு தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**உதவிப் பொருட்கள்**

1) உலர் உணவு
2) பால்மா வகைகள்
3) சிறுவர்களுக்கான புதிய உடைகள்

என்பனவற்றை நாளை (வெள்ளி) மாலை 6 மணிக்கு முன்னர் கன்னாதிட்டியில் உள்ள 'சயன்ஸ் கோல்' கல்விநிறுவனத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**விசேட குறிப்பு**

1) ஒன்றியத்தின் முன் அனுமதி இல்லாமல் புதியகல்வி நிறுவனங்களை (பொது, பிரத்தியேகம்) ஆரம்பிக்க முடியாது.

2) இயக்குநர்கள் உங்கள் முத்திரை அளவிலான கலர் புகைப்படம் ஒன்றை எமது இணைப்பாளரிடம் 27-12-2004 முன் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

3) பிரத்தியேக வகுப்பு என்பது தனி ஒரு ஆசிரியர் 10க்கு உட்பட்ட மாணவர்களுக்கு நடாத்தும் கற்கைநெறி என்பதனை கவனத்தில் கொள்க.

**செயலாளர்**
**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,**
**யாழ்/நல்லூர் பிரதேசம்.** (C-909)

**உடன் தேவை**

**பத்திரிகை விநியோகஸ்தர்கள்**
(சொந்தமோட்டார் சைக்கிள் வைத்திருப்பவரும், இரவில் நிறுவனத்தில் தங்கியிருப்பதும் அவசியமானதாகும்)

**ஓவ்செற் இயந்திர இயக்குநர்**
(அனுபவமுள்ளவர்கள் மட்டும்)

குறிப்பு :- யாழ். நகரமையத்திலிருந்து 8 கி.மீ தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் 24.12.2004 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நேரில்வரவும்.

**ஆளணி முகாமையாளர்**
**வலம்புரி**

நாதன்ஸ் சினிமா (யாழ்)
(குளிரூட்டப்பட்டது)
விக்ரம், கிரண், மனோரமா நடித்த
ஜெமினி
கா.நே 10.30, 2.30 (பி.நே)
தினசரி இரவு 6.30, 9.00 (பி.நே) ஆங்கிலப்படம்
THE MUMMY RETURNS
விரைவில் THE PASSION OF THE CHRIST
(யேசு பிரானின் இறுதி 12 மணிநேரக் கதை)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
காட்சி நேரம்: 11.00 2.45 6.00 (பி.நே)
தனுஷ், திபா நடித்த
ட்ரீம்ஸ்
வெள்ளி; சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே)
THE MUMMY RETURNS

ராஜா, யாழ்ப்பாணம்
சில தினங்கள் மட்டும்
சரத்குமார், வடிவேல், நிதிகா
நடிப்பில்
அருமை
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும் (பி.நே)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.